வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 132 | பக்கங்கள் : 16

# குருந்தூர்மலை பகுதியில் வயல் உழுத மூவர் கைது!

முல்லைத்தீவு, மே 11

**குருந்தூர்மலையில் விவசாய நடவடிக்கைக்காக வயல் காணியை உழவு இயந்திரம் மூலம் உழுதவர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குருந்தூர்மலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி மற்றும் தொல் பொருள் திணைகளத்தின் முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவர்களை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.**

குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி ரஜமகா விகாரை அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அந்தப் பகுதியிலுள்ள பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை புனிதபூமி என்ற பெயரில் குறித்த விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி ஆக்கிரமித்துள்ளார். தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இந்த நிலம் குறித்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட தமது வயல் நிலங்கள் தாம் பரம்பரையாக வயல் செய்து வந்த நிலங்கள் என்று அந்தப் பகுதியின் தமிழ் மக்கள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில், குமுழமுனை - தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனம் ஊடாக தனக்கு சொந்தமான வயலில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக நேற்று சனிக்கிழமை வயலின் உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் கூலியாட்களை பயன்படுத்தி நிலத்தை உழுதுள்ளார்.

இதன்போது, அங்கு வந்த பிக்கு மற்றும் தொல்லியல் திணைகளத்தினர், பொலிஸார் ஆகியோர் நிலத்தை உழுவதைத் தடுத்து நிறுத்தினர். அத்துடன், அந்தப் பணியில் 15

# விகாரையின் நிலத்தில் அகழ்வில் ஈடுபட்டனர்!

### விகாராதிபதி குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மே 11

விகாரைக்கு சொந்தமான நிலத்தில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டனர் என்று ரஜமகா விகாரையின் விகாராதிபதி கல்கமுவ சாந்த போதி தெரிவித்துள்ளார்.

ரஜமகா விகாரைக்கு சொந்தமானதென சுமார் 15

# பொதுவான கோட்பாட்டுக்கு இணங்கி ஆதரவளியுங்கள்!

### தமிழ் கட்சிகளிடம் தமிழ் அரசு கோரிக்கை



- குமார. கோகுலன் -

வவுனியா, மே 11

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சி ஆட்சி அமைக்கக் கூடிய உரிமை பொதுவாக இருக்கும். அந்தக் கோட்பாட்டுக்கு இணங்கி ஆதரவளிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் விநயமாகக் கோருகிறோம் என்று தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்று வவுனியாவில் கூடியது. இதன் பின்னர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். 15

# வடக்கு மக்களின் வாக்குகளை நாம் இலக்கு வைக்கவில்லை!

### அமைச்சர் பிமல் கூறுகிறார்

கொழும்பு, மே 11

தேசிய மக்கள் சக்தி உண்மையாகவே வடக்குக்கு சேவையாற்றுகிறது. மாறாக, அந்த மக்களின் வாக்குகளை இலக்குவைத்து எமது கட்சி செயல்படவில்லை - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்தப் பேட்டியில், "காணாமல் போயிருந்த நிலை யில் மீண்டும் கிடைப்பவருக்கே வீடுகளில் கூடுதலாக கவனிப்பு இருக்கும். ஏனெனில், 15

# உயிரிழந்த மாணவி ஆசிரியரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டார்!

### பொலிஸ் ஊடக பிரிவு அறிக்கை

கொழும்பு, மே 11

கொழும்பு - கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த 16 வயதான தமிழ் மாணவி பாடசாலை ஆசிரியரால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஆசிரியர் கடந்த ஜனவரி 8ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு 10ஆம் திகதி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்றும் 15

# தமிழ் தரப்பு ஆட்சியமைப்பதற்காக தமிழ் அரசுக்கு ஆதரவளிக்க தயார்!

### கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 11

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச்சூழலுக்கு தேவையான ஒன்றாகும். இதனால், தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க நாம் தமிழ் அரசு கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவளிக்கப் பின்னிற்கமாட்டோம் - இவ்வாறு கூறியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவுகள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் பயணிக்கும் மக்களுக்கு மாபெரும் வெற்றி. அத்துடன், அதற்குக் கிடைத்த ஆணையாகவும் அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தனது கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று சனிக்கிழமை 15

# வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும்!

### ரெலோ தலைமை கூட்டத்தில் தீர்மானம்

- கூட்டமைப்பாக பயணிப்பது குறித்து முடிவில்லை

- குமார. கோகுலன் -

வவுனியா, மே 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரந்துபட்டளவில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலர வேண்டும். இதில், நாங்கள் உறுதியாக இருக்கிறோம். கட்சியின் தலைமை குழு கூட்டத்திலும் இந்த முடிவையே எடுத்துள்ளோம் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக பயணிப்பது தொடர்பில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ரெலோ கட்சியின் தலைமை குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதன் பின்னர் 15

# மக்களின் சமிக்ஞையை புரிந்துகொண்டுள்ளோம்!

### நீதி அமைச்சர் ஹர்சன

கொழும்பு, மே 11

உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு வழங்கிய சமிக்ஞையை முழுமையாகப் புரிந்து கொண்டுள்ளோம் - என்று நீதி மற்றும் சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் 15

# இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் அமுல்!

புதுடில்லி, மே 11

அனைத்து வகையான இராணுவ நடவடிக்கைகளையும் நேற்று சனிக்கிழமை மாலை 5 மணி முதல் நிறுத்துவதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டன. இதனை இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

"இன்று (நேற்று) மாலை 5 மணிமுதல் நிலம், வான், கடல் என அனைத்து வகையான 15

### அரசுக்கு எதிராக ஆட்சியமைக்க

# நிபந்தனை இல்லாமல் எதிர்க்கட்சிகள் ஆதரவு

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே 11

பணம், சிறப்புரிமைகளுடன் சுயேச்சை குழுக்களுக்கு அரசாங்கம் வலைவீசுகிறது என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. எவ்வாறிருப்பினும் அரசாங்கத்துக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களை நிறுவுவதற்கு எதிர்க் கட்சிகள் நிபந்தனைகளின்றி 15

# சுற்றுச் சூழல் அபிவிருத்தி மிகவும் சவாலான விடயம்

## பதில் அரசாங்க அதிபர் பிரதீபன்

யாழ்ப்பாணம், மே 11

சுற்றுச்சூழல் அபிவிருத்தி என்பது மிகவும் சவாலான விடயம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

இலங்கையின் கொள்கை ஒத்திசைவு மற்றும் சீர்திருத்தத்துக்கான பங்குதாரரர் கலந்துரையாடலானது நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, தலைமையுரையாற்றிய பதில், அரசாங்க அதிபர், இலங்கையின் சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் கடந்த 25 வருடங்களாக தேசிய மற்றும் சர்வதேச கொள்கை சீர்திருத்த வழிமுறைகளுக்கு பங்களித்து வரும் ஒரு நிறுவனம். இந்த நிறுவனமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து இலங்கையின் தற்போதைய கொள்கைப் போக்குகள், இடைவெளிகளை அடையாளங் கண்டு ஒருங்கிணைந்த முறைமைப்படுத்தப்பட்ட கொள்கைச் சீர்திருத்தச் செயல்பாடுகளை மீள் வடிவமைப்புக்கு பங்களிக்கும் வகையில் தொடர்புடைய பங்குதாரர்களிடமிருந்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், சுற்றுச்சூழல் அபிவிருத்தி என்பது சவாலான விடயம் எனவும், அனைவரும் ஒன்றிணைந்து தமது புலமைகளை இக் கலந்துரையாடலில் முன்வைத்து கொள்கை வகுப்பாளர்களுக்கு அனுசரணையாக செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனனும், இந்தக் கலந்துரையாடலின்



இணைப்பாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறை பேராசிரியர் கே. கஜபதியும் பங்குபற்றியதுடன், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர், பிரதிப் புள்ளிவிவர பணிப்பாளர் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்புடைய திணைக்கங்களின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)

# வீதியில் மறித்து கடை உரிமையாளர்மீது இனந்தெரியாத கும்பல் கடும் தாக்குதல்!

யாழ்ப்பாணம், மே 11

அச்சுவேலியில் நேற்றுக் காலை இனந்தெரியாத கும்பலொன்று நடத்திய தாக்குதலில் கடை உரிமையாளர் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

காலை 06.15 மணியளவில் அச்சுவேலி மருத்துவமனை வீதியூடாக தனது கடையைத் திறப்பதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை இடைவழியில் மறித்த இனந்தெரியாத கும்பல் கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளது.

குறித்த வீதியில் கார் ஒன்றில் காத்திருந்த இனந்தெரியாதோர் பொல்லுகளால் கடுமையாக தலை, கை என்பவற்றில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய இருவர் தம்மை அடையாளம் காணாதவாறு முகத்தை துணியால் கட்டி மறைத்திருந்ததாக தெரியவருகிறது.

தாக்குதலுக்குள்ளானவர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக உணவகமொன்றை நடத்திவரும் சின்னையா ஆலாலசுந்தரம் (வயது



-54) என்பவர் ஆவார்.

காயமடைந்தவர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மாணவி மரணம் தொடர்பில் விசேட விசாரணை ஆரம்பம்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கொழும்பு, மே 11

கொட்டாஞ்சேனையில் மாணவி ஒருவர் தமது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அத்துடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்துக்கு அமைய, கொட்டாஞ்சேனை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸாரிடம் இருந்து இந்த விடயம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பாடசாலைக்குள் இடம் பெறும் உடல், உள மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் அறியப்படுத்தாமை, பாடசாலையின் நற் பெயரை பாதுகாக்கும் நோக்கில் செயல்படுதல் போன்றவற்றால் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி கார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும் போது உடனடியாக பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினர் அது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறியப்படுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# இந்த உலகை உய்விக்க வந்த பெருங்கோட்பாடு சூழலியம்!

## மாணவர்கள் மத்தியில் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், மே 11

கம்யூனிசம், சோசலிசம், பெரியாரியம் என்று காலத்துக்குக் காலம் மனுக்குலத்தை வழி நடத்தவெனக் கோட்பாடுகள் உருவாகி வந்துள்ளன. தற்போது மானுடத்தையும் தாண்டி ஒட்டுமொத்த உலகையுமே உய்விக்க வந்த பெருங்கோட்பாடாகச் சூழலியம் உருவெடுத்துள்ளது. மாணவர்கள் சுற்றுச் சூழலை சூழலியற் கல்வியின் ஊடாக மாத்திரம் அணுகாமல் சூழலியம் என்ற சித்தாந்தத்தின் ஊடாகவும் அணுக முன்வர வேண்டும். அதுவே உலகளாவிய ரீதியில் நாம் இன்று எதிர்கொண்டுள்ள பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைத் தரும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் 2027 பிரிவு பயிலுகின்ற மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சூழலியற் கல்வி சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும். சூழல் விழிப்புணர்வு சூழல் பாதுகாப்பில் எங்களைப் பங்குபற்றுநர்களாக்க வைக்கும். ஆனால், எமது கல்வி முறைமை பூமியையோ, சுற்றுச் சூழலையே அதன் முழுப் பரிமாணங்களோடும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளைத் தரவில்லை. நாம் பாடங்களைக் கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு என்றும் புவியியல், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் என்றும் வரையறுத்தே கற்கிறோம். இந்தப் பாட எல்லைகளைக் கடந்து சிந்திக்க இயலாததால் யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்கும் பூரண அணுகுமுறை எங்களிடம் இல்லாமற் போய்விட்டது. இதனால், அந்தகர்கள் யானையைப் பார்ப்பது போன்றே, நாம் ஒவ்வொருவரும் நமது துறைசார் கல்வி அறிவின் ஊடாக மட்டுமே பூமியை மதிப்பீடு செய்து வருகிறோம்.

அறிவியல் என்பது மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கானவற்றைக் கண்டறிவதற்கென உருவான துறை. ஆனால், அதுவே இன்று இயற்கையைப் பணிவிக்க முயலும், சகல வளங்களையும் அடியோடு அனுபவிக்கத் துடிக்கும் சூழல் விரோத சிந்தனைப் போக்காக உருவெடுத்துள்ளது. ஏனைய உயிரினங்களோடு மனிதனும் ஓர் உயிரினம் என்பதை மறுத்த மனிதனே மையம் என்ற சிந்தனையே சூழல் மீதான ஆக்கிரப்புகளாக வெளிப்படுகின்றது. மனிதனின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகப் பூமியும் அவ்வப்போது தனது எதிர்ப்புகளைக் காட்டி வருகிறது. காலம் தப்பிய அடைமழை, வெள்ளப் பெருக்கு, கடும் வரட்சி, பெரும் புயல், நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள் எல்லாம் மனிதர்களின் அடக்கு முறைகளுக்கு எதிரான பூமியின் எதிர்ப்பு நடவடிக்கைகள்தான்- என்றார். (எ-05)

# வாணவேடிக்கையால் தீப்பற்றியது யாழ். பண்பாட்டு மலர்ச்சிக் கூடம்!

யாழ்ப்பாணம், மே 11

யாழ்ப்பாணம் - கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள சமூக செயல்பாட்டு மையமாக விளங்கி வந்த பண்பாட்டு மலர்ச்சிக் கூட அரங்காலயத்தின் மேற்கூரை தீ விபத்துக் குள்ளாகியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பழம் வீதியில் உள்ள வைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இடம்பெற்று வருகிறது. சுவாமி வெளிவீதியுலாவின் போது வாணவேடிக்கைகள் இடம்பெற்றன. அதிலிருந்து பறந்த தீப்பொறி அரங்காலய மேற்கூரையில் பட்டு எரிந்துள்ளது.

இதனைப் பார்த்த அயலவர்கள் உடனடியாக தீயணைப்பு பிரிவினருக்கும், பொலிஸாருக்கும், அரங்காலய




நிர்வாகத்தினருக்கும் அறிவித்துள்ளனர்.

அவர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த போதும் கிடுகு ஓலைகள் முழுவதும் எரிந்ததுடன், மேற்கூரை மரங்கள், இலத்திரனியல் பொருள்கள், கதிரைகள் உள்ளிட்ட தளபாடங்களும் பகுதியளவில் தீயினால் சேதமடைந்தன.

இதனையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைக்காக பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தினரிடம் இருந்து வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளனர்.

ஆலயங்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் வாணவேடிக்கைகள் நிகழ்த்துபவர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (எ-05)

# இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 11

போதைப்பொருள் பாவித்ததன் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவர் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அமைச்சு பதவியை சரோஜா இராஜினாமா செய்ய வேண்டும்

## ரோஹிணி எம். பி. வலியுறுத்தல்

கொழும்பு, மே 11
சரோஜா போல்ராஜ் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருக்கான பொறுப்பிலிருந்து விலகியுள்ளார். எனவே, அவர் உடனடியாக அமைச்சு பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் மாணவி மரணத்தில் சர்ச்சைக்குரிய தனியார் கல்வி நிலைய ஆசிரியரை பாதுகாக்கும் வகையிலேயே அமைச்சர் சரோஜா போல்ராஜ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். எனவே அவர் அமைச்சுப் பதவி வகிப்பதற்கு பொருத்த மற்றவர் என்றும் ரோஹிணி எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போது பேசுபொருளாகியுள்ள கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் உயிரை மாய்த்துக் கொண்ட பாடசாலை மாணவி தொடர்பில் பெண்ணாக, தாயாக, ஆசிரியராக, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சரோஜா போல்ராஜ் பொறுப்பின்றி செயல்படுகின்றார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரான அவர் அமைச்சர் என்ற பொறுப்புக்கும், அரசாங்கம் என்ற பொறுப்புக்கும் அப்பால் செயல்பட்டுக் கொள்கின்றார். பாடசாலையில் துன்புறுத்தலுக்கு உள்ளான தோடு மாத்திரமின்றி, மேலதிக வகுப்பொன்றிலும் துன்புறுத்தலுக்கு உள்ளான குறித்த மாணவி மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

அந்த மாணவி உள ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்காக இந்த சம்பவம் மூடி மறைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் கூறுகின்றாரா? இது தொடர்பில் கேள்வியெழுப்புவதற்காக பாராளுமன்றத்தில் நான் முயற்சித்த போது சபாநாயகர் உட்பட ஆளுங்கட்சியினர் எவரும் எனக்கு கருத்து தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கவில்லை.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் முன்னிலையான குறித்த மேலதிக வகுப்பு ஆசிரியரைப் பாதுகாப்பதற்காகவா அரசாங்கம் இவ்வாறு செயல்படுகின்றது? மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும். அவர் இந்த சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு அவர் பொருத்த மற்றவர் என்பது தெளிவாகியுள்ளது. எனவே அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று ரோஹிணி எம். பி. அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மாணவன் கொண்டு சென்ற பாணுக்குள் கஞ்சா பைக்கற்

கொழும்பு, மே 11
கொழும்பு, கடவத்தை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் காலை உணவுக்காக பாடசாலைக்கு கொண்டு சென்ற பாணுக்குள் இருந்து 2 கஞ்சா பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கடவத்தை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் காலை உணவுக்காக பாடசாலைக்கு பாண் கொண்டு சென்றுள்ளார்.

மாணவன் பாணை சாப்பிட்டு கொண்டிருக்கும் போது பாணுக்குள் இருந்த 2 கஞ்சா பைக்கற்றுக்களை கண்டுள்ளார்.

அதனை குறித்த மாணவன் ஆசிரியரிடம் கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஆசிரியை, பாடசாலை மாணவனின் தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய போது, மாணவன் பாடசாலைக்கு சென்ற பின்னர் ஓட்டோவில் பாண் விற்பனை செய்யும் சாரதி வந்து, பாணை மாணவனுக்கு சாப்பிட கொடுக்க வேண்டாம் என்று கூறியதாகவும் ஆசிரியையிடம் மாணவனின் தாய் கூறியுள்ளார்.

இதனையடுத்து ஆசிரியை இது தொடர்பில் பாடசாலை அதிபரிடம் அறிவித்துள்ளார்.

பின்னர் பாடசாலை அதிபர் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில், குறித்த ஓட்டோ சாரதி பாண் விற்பனை செய்யும் போர்வையில் போதைப்பொருளை விற்பனை செய்து வந்ததாக தெரியவந்துள்ளது.

குறித்த ஓட்டோ சாரதி வேறொரு நபருக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்த கஞ்சா அடங்கிய பாணை தவறுதலாக பாடசாலை மாணவனுக்கு கொடுத்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# திசைகாட்டியின் ஏமாற்று அரசியலுக்கு முற்றுப்புள்ளி!

## ஐ.தே.கவின் முன்னாள் எம்.பி

கொழும்பு, மே 11
திசைகாட்டியின் பொய் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சகல எதிர்க் கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன. 266 உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தாலும் 116 மன்றங்களில் மாத்திரமே ஆட்சியமைக்க கூடியவளவு பெரும்பான்மை அரசாங்கத்துக்கு காணப்படுகிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐ. தே. க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலை விட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் 34 சதவீதம் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது. 266 உள்ளூராட்சி மன்றங்களில் தாம் வெற்றி பெற்றுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், அவ் அனைத்திலும் இவர்களால் சபைகளை நிறுவ முடியாது. 116 சபைகளில் மாத்திரமே அரசாங்கத்தால் ஆட்சியமைக்க முடியும்.

மறுபுறம் ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் உள்ளிட்ட கட்சிகள் கடந்த காலங்களை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி இறுதியாக யானை சின்னத்தில் களமிறங்கிய போது பெற்றுக் கொண்ட வாக்குகளை விட இருமடங்கு அதிக வாக்குகளை இம்முறை பெற் றுள்ளது. இது நூறு சதவீதம் அதிகரிப்பாகும். - என்றார். (எ)

# பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியே சபாநாயகராக தொடர வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி விருப்பம்



கொழும்பு, மே 11
பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவி வகிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். சட்டம், பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்கு அமைய அவர் நடுநிலையாக செயல்படுகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளை குறைத்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டு அரசாங்கம் செயல்படுகின்ற நிலையில் தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு தகுந்த பாடத்தை கற்பித்துள்ளார்கள். அரசாங்கம் இதனை சிறந்த படிப்பினையாக கொள்ள வேண்டும்.

தேர்தல் காலத்தில் செயல்பட்டதை போன்று தற்போதும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்பட அரசாங்கம் முயற்சிக்கிறது. முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்கு ஏன் எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

இவ்வாறான நிலையில் தான் எதிர்க்கட்சியால் இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே, இந்த தனி நபர் பிரேரணை தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

# வாழை செய்கையில் ஈடுபட இளையோருக்கு வாய்ப்பு!

புதுக்குடியிருப்பு, மே 11
தூய்மையான இலங்கை எனும் அரசின் கொள்கைக்கு அமைவாக முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தேராவில் கிராம அலுவலர் பிரிவில் மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரச காணியில் ஏற்றுமதிக்காக கேவண்டிஷ் வாழைச்செய்கைக்காக அரை ஏக்கர் வீதம் இலவச குத்தகை அடிப்படையில் 5 வருடங்களுக்கு காணி வழங்கப்படவுள்ளது என புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இத்திட்டமானது இளைஞர் மற்றும் யுவதிகளை விவசாயத்தை நோக்கி ஈர்ப்பதற்காகவும், இளம் தொழில் முனைவோர்களை உருவாக்கும் நோக்கத்துக்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும் மற்றும் பயன்படுத்தப்படாமல் உள்ள விவசாய காணிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கங்களின் அடிப்படையிலேயே செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் இளைஞர் - யுவதிகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட எந்தவொரு கிராம அலுவலர் காரியாலயத்திலும் விண்ணப்ப படிவத்தை 14.05.2025 தொடக்கம் 28.05.2024 வரை உள்ள வேலை நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும். இத்திட்டத்துக்கு ஏற்படும் செலவில் 25 வீதத்தை பயனாளிகள் செலுத்தும் இயலுமையை கொண்டிருக்க வேண்டும். பின்வரும் மதிப்பீட்டு அளவுகோல்களின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள். வதிவிடத்துக்கான புள்ளிகள் (தேராவில் கிராமம் உயர்கட்டு கிராமங்கள், அருகே உள்ள கிராமங்களில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், மாவட்டத்தில் மற்றும் மாகாணத்தில்), பயிர் செய்யும் தன்மை, சமூக நிலை (பெண் தலைமைத்துவம் மற்றும் மாற்றுத்திறனாளிகள்). மற்றும் வயதெல்லை என்பவற்றின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும், விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் தீர்மானம் மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் என்பன அனுப்பிவைக்கப்படும்.

பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் பயனாளிகள் எனும் அடிப்படையில் நான்கு தரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். மேலும், வாழைத்தோட்ட பயிர்ச்செய்கைக்காக உருவாக்கப்பட்டுள்ள அல்லது உருவாக்கப்படும் விவசாயிகள் கம்பனியில் அங்கத்தவராக சேர்க்கப்படுவார்கள். அத்துடன் பயனாளிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கேவண்டிஷ் வாழை உற்பத்தியை ஒப்பந்தம் மூலம் ஏற்றுமதிக்காக கைச்சாத்திடும் நிறுவனத்துக்கே வழங்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பதாரி வதியும் கிராம உத்தியோகத்தர்களின் சிபார்சினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ் விண்ணப்பங்களை 28.05.2025ஆம் திகதி பிற்பகல் 03.00 மணி அல்லது அதற்கு முன்னர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளையில் நேரடியாக கையளிக்க வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எக்காலத்திலும் குறித்த காணிகள் பயனாளிகளுக்கு சொந்தமாகாது என்பதுடன் ஏதிர்காலத்தில் தேவையேற்படின் குத்தகை காலத்தை நீடிப்பது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும். ஒப்பந்த சரத்துகள் மீறப்படின் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு ஏனைய பொருத்தமான பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (எ-05)

# எம்.பிக்களின் பாதுகாப்பு எவ்வாறு குறைக்கப்பட்டது?

## ஹேசா விதானகே எம்.பி. கேள்வி

கொழும்பு, மே 11

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். நாட்டில் தனிநபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் பின்னரா பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. சமூக கட்டமைப்பில் தீவிரமடைந்துள்ள துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தனிநபர் பாதுகாப்பு எவ்வாறுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது ஹேசா விதானகே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விசேட சலுகைகளை முறையான வழிமுறைகளுக்கு அமைய இரத்துச் செய்தல் அல்லது குறைத்தல் தொடர்பான தனிநபர் பிரேரணையை முன்வைக்கிறேன்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகைகள் தொடர்பில் கடந்த தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த விடயத்துக்கு வெளிப்படையான தீர்வை வழங்குவதாயின் அரசாங்கம் இதுவரையான காலப்பகுதியில் ஒரு தீர்மானத்தை எடுத்து அதனை அமுல்படுத்தியிருக்கவேண்டும்.

ஆட்சிக்கு வந்து இரண்டு வார காலத்துக்குள் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகைகளை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 8 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. வெளிப்படையான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறானதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்திய அரசாங்கம் மக்கள் மத்தியில் இனியாவது வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்பததையே நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு எடுத்துரைத்துள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பில் அரசாங்கம் குறிப்பிட்ட பொய் அனைத்தும் இன்று மறுக்கப்பட்டுள்ளது. அரசியல் வெற்றிக்காக இவ்வாறு பொய்யுரைக்க கூடாது.

வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் முறையாக செயல்படுத்த வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒய்வூதிய கொடுப்பனவுகளை பெறுகி றார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். நாட்டில் தனிநபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் பின்னரா? பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. சமூக கட்டமைப்பில் தீவிரமடைந்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தனிநபர் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்துகிறது.

மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு அரசாங்கம் கன்னத்தில் அறைந்துள்ளது. இதற்கான பதிலடியையே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த தனிநபர் பிரேரணையின் உள்ளடக்கத்தை தேசிய மக்கள் சக்திதான் சமூகமயப்படுத்தியது. ஆகவே, இந்தப் பிரேரணையை அர சாங்கம் முறையாக செயல்படுத்த வேண்டும்”- என்றார்.

(எ)

# மதுபோதையில் காரை செலுத்தியதால் விபத்து

## சாரதி உயிரிழப்பு

கொழும்பு, மே 11

குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியில் பலுகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.15 மணியளவில் இடம்பெற்றது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியை விட்டு விலகி சுமார் 25 மீற்றர் தூரத்துக்கு இழுத்து செல்லப்பட்டு அருகிலிருந்த வீடொன்றின் இரும்பு நுழைவாயில் மற்றும் மின் கம்பத்தின் மீது மோதி பின்னர் மற்றுமொரு வீட்டின் கிணற்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த காரின் சாரதி சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது காரின் சாரதி மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காயங்களுடன் சிறுமி மரணம் பொலிஸார் தீவிர விசாரணை!

பதுளை, மே 11

பதுளை - பசறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடகம பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் சிறுமி ஒருவர் உயிரிழந்ததாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

பசறை - உடகம பிரதேசத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சிறுமி நேற்று முன்தினம் இரவு திடீரென சுகவீனமுற்று பசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த நிலையில், சிறுமியின் மரணம் குறித்து சந்தேகிப்பதாக மருத்துவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

இந்தச் சிறுமி கடந்த சில நாட்களாக காய்ச்சல் மற்றும் சளி காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

எவ்வாறிருப்பினும், உயிரிழந்த சிறுமியின் உடலில் பல காயங்கள் காணப்படுவதாக மருத்துவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பசறை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பசறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு இறைச்சிக் கடைகளுக்கு பூட்டு

கொழும்பு, மே 11

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூன்று நாட்களுக்கு மூடப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, பல்பொருள் விற்பனை நிலையங்கள் உட்பட அனைத்து இறைச்சிக் கடைகளிலும் நாளை 12 ஆம் திகதி, நாளை மறுதினம் 13 மற்றும் 14 ஆம் திகதி வரை இறைச்சி விற்பனை செய்யப்படாது என உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வெசாக் பண்டிகை கொண்டாடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை:

# போதைப்பொருட்களுடன் மேலும் 359 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 11

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 359 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயினுடன் 129 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 133 பேரும், கஞ்சாவுடன் 94 பேரும், கஞ்சா செடிகளுடன் 03 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 166 கிராம் 220 மில்லி கிராம் ஹெரோயினும், 176 கிராம் 446 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், 04 கிலோ 142 கிராம் 135 மில்லி கிராம் கஞ்சாவும், 12534 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

# கொழும்பில் மாணவி உயிர்மாய்ப்பு: ஆசிரியர் சி.ஐ.டியில் முறைப்பாடு!

கொழும்பு, மே 11

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற 16 வயது மாணவி பாடசாலை ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து மன விரக்தி அடைந்த நிலையில் உயிரை மாய்த்துக்கொண்டமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மற்றுமொரு நபரான தனியார் வகுப்பு ஆசிரியர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார்.

தனது புகைப்படங்களைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பகிரப்படும் பதிவுகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஆசிரியர் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆசிரியர்,

கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியில் உள்ள தொடர்மாடி குடியிருப்பின் மேல் மாடியிலிருந்து கீழே குதித்து 16 வயது மாணவி ஒருவர் உயிரை மாய்த்துக்கொண்டார்.

உயிரிழந்த மாணவி ஜனவரி 18 ஆம் திகதி எனது தனியார் வகுப்பில் இணைந்தார். முதல் வாரத்தில் மாணவி திடீரென சுயநினைவை இழந்தார். இதன்போது மாணவிக்கு முதலுதவி அளித்து, அவருடைய தந்தையை அழைத்து அவருடன் அனுப்பி வைத்தேன்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், மாணவி வகுப்பறையில் மயங்கி விழுந்தார். பின்னர் சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் சேர்ந்து, மாணவிக்கு முதலுதவி அளித்து, தந்தையுடன் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

மூன்றாவது வாரத்தில், மாணவி அசாதாரண நடத்தையை வெளிப்படுத்துவதை அறிந்ததாக ஆசிரியர் கூறினார். அவர் செய்த ஒரு கண்காணிப்பின் போது மாணவியின் அசாதாரண நடத்தையை கவனித்து அவள் ஏன் தனியாக இருக்கிறார் என்று கேட்டேன்.

நான் அவரது அம்மாவை அழைத்தேன். பிரதான மண்டபத்துக்குச் சென்று, அங்கே காத்திருந்து அவருடைய அம்மாவிடம் பேசினேன். இந்த மாணவிக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அவருக்கு முறையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவருடைய அம்மாவிடம் விளக்கினேன்.

சமூக ஊடகங்களில் பரவிய ஒரு அறிக்கையில், “நான் வகுப்பறைக்குச் சென்று, மாணவியை எழுப்பி, அவருடைய பெயரைச் சொல்லி, உன் பாடசாலையில் உனக்கு ஒரு பிரச்னை இருக்கிறது, அதனால் நீ வகுப்புக்கு வருவதை நிறுத்த வேண்டும்” என்று சொன்னேன் என கூறப்படுகிறது. அது என் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டு என்றும் ஆசிரியர் கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. நான் வகுப்பறைக்கு சென்றதில்லை. உண்மையில், நான் வகுப்பறைகளுக்கு அருகில் கூட செல்வதில்லை. ”ஒரு வகுப்பறையில் ஐந்து மாணவர்கள் இருந்தாலும், நான் உள்ளே சென்று மாணவர்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

சம்பவம் நடந்து 13 நாட்களுக்குப் பிறகு சமூக ஊடகங்களில் எனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து கவனத்தை ஈர்த்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

உண்மை விரைவில் வெளிவரும். நான் இதைப் பற்றி மேலும் பேச விரும்பவில்லை, ஆனால், உண்மை வெளிவரும்- என்றார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய காரணம் அரசியல் என்றும் ஆசிரியர் கூறினார். ”நான் ஒரு அரசியல்வாதி என்பதால் இவ்வளவு தாக்கப்படுகிறேன். கடந்த 6-7 நாட்களாக எனக்கு எந்த நிம்மதியும் இல்லை. எனது அன்றாட நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன. சமூக ஊடகங்கள் மூலம் கொழும்பு பகுதியில் நான் ஒரு வெறுக்கத்தக்க நபராக மாற்றப்பட்டேன் என்றும் ஆசிரியர் கூறினார். (எ)

ஈழநாடு
Eelanadu
11.05.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இனியாவது புரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் பொது மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்தது. குறித்த, தாக்குதலுக்கு எதிர்வினையாற்றும் வகையில் பாகிஸ்தானை தளமாகக் கொண்டு இயங்கிவரும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளின் இலக்குகள்மீது இந்தியா வான் வழித் தாக்குதல்களை ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் போர் பதற்றம் அதிகரித்திருக்கிறது. முழு அளவிலான யுத்தத்தை நோக்கி தாக்குதல்கள் நகராது விட்டாலும்கூட அதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவே தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறானதொரு சூழலில், சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்) பாகிஸ்தானின் பொருளாதார மறுசீரமைப்புக்காக 100 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் தீர்மானத்தை உறுதிப்படுத்தியிருக்கிறது. இந்தியாவின் எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் நாணய நிதியம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது. இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், "நாணய நிதியம் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறதா - இது ஒரு வெட்கக்கேடான விடயம்", என்று தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

நாம் தற்போது, இந்த விடயம் தொடர்பில் குறிப்பிடுவதற்கு ஒரு பிரத்தியேக காரணம் உண்டு. அதாவது, இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்ததைத் தொடர்ந்து பொருளாதார மறுசீரமைப்புக்காக நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படும் முடிவை எடுத்திருந்தது. அந்த சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறாத இலங்கைக்கு நாணய நிதியம் உதவி வழங்கக்கூடாது என்னும் கருத்தை தமிழ் அரசியல்வாதிகளும் கருத்துருவாக்கிகள் என்போரும் முன்வைத்திருந்தனர்.

உண்மையில், நாணய நிதியத்தின் நிகழ்ச்சிநிரலில் நாடுகளின் மனித உரிமைகள் சார்ந்த பொறுப்புக்கூறல் விடயம் இல்லை. எனினும், இதனைப் புரிந்து கொள்ளாமலேயே நமது சூழலில் தவறான கருத்துகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த விடயம் தொடர்பில் எமது முன்னைய ஆசிரியர் தலையங்கங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். சர்வதேச விவகாரங்கள் தொடர்பில் போதிய புரிதல் இல்லாமல் தமிழ் மக்கள் மத்தியில் போலியான நம்பிக்கைகளை முன்வைக்கும் போக்கானது நமது அரசியல் சூழலில் காணப்படும் ஒரு நீண்டகாலப் பிரச்னைதான்.

பாகிஸ்தானுக்கும் நாடு கடந்த பயங்கரவாத அமைப்புகளின் வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பு உலகம் அறிந்த ஒன்று. அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலின் சூத்திரதாரியான ஒஸாமா பின்லேடன் ஒன்பது ஆண்டுகளாக பாகிஸ்தானின் இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்பின் ஆதரவுடன்தான் தலைமறைவாக இருந்தார். இறுதியில் அமெரிக்காவின் இரகசிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றின் மூலம் 2011இல் பாகிஸ்தானில் வைத்து பின்லேடன் கொல்லப்பட்டார். பாகிஸ்தான் அரசை நம்ப முடியாது என்னும் அடிப்படையில்தான் ஒபாமா நிர்வாகம் குறித்த தாக்குதலை பாகிஸ்தானுக்குத் தெரியாமலேயே அந்த நாட்டுக்குள் மேற்கொண்டது. அந்தளவுக்கு பாகிஸ்தானிய அரச இயந்திரமும் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளும் பிரிக்க முடியாத தொடர்பில் இருக்கின்றன.

இவ்வாறான பின்னணி கொண்ட ஒரு நாட்டுக்கு அதிலும் இந்தியாவோடு யுத்தம் ஒன்று மூளக்கூடிய நிலைமை காணப்படுகின்ற சூழலில்கூட சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானுக்கான நிதியுதவியை உறுதிப்படுத்தியிருக்கிறது. இந்த அடிப்படையில் சிந்தித்தால், நாணய நிதியம் தமிழ் மக்களின் மனித உரிமைகளை கருத்தில் கொண்டு இலங்கைமீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்று எண்ணுவதானது எந்தளவுக்கு தவறானது என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியுமல்லவா! இனியும் இவ்வாறு எண்ணினால், அதனை விடவும் ஒரு சிறுபிள்ளைத்தனம் இருக்க முடியுமா?

# 17 கிலோ செப்பு கம்பியுடன் இளைஞர்கள் இருவர் கைது!

மன்னார், மே 11

மன்னார் ஜிம்ரோ நகர் பகுதியில் 2 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 17 கிலோ 200 கிராம் செப்புக் கம்பி மற்றும் தொலைபேசி கேபிள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இவர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் 19 வயது இளைஞர்களாவர். மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தரவுக்கு அமைவாக அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு

# தாமரைக் கோபுரத்தில் டிஜிற்றல் அலங்காரம்

கொழும்பு, மே 11



இலங்கையின் முக்கிய பகுதியான கொழும்பு தாமரைக் கோபுரம், இம்முறை வெசாக் பண்டிகையை முன்னிட்டு அதிநவீன டிஜிற்றல் அலங்காரங்களுடன் மக்களை கவரும் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

வெசாக் பண்டிகையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், கோபுரத்தில் டிஜிற்றல் தோரணங்கள், பௌத்த இதிகாசங்களை சித்திரிக்கும் திரை அலங்காரங்கள், நியோன் மின் விளக்குகள் மற்றும் தரைக்கட்டமைப்பு மின் விளக்குகள் என பன்முகக் கலையமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் யோகேஸ் வரன் நிரோஜன் தெரிவிக்கையில்,

"தெற்காசியாவின் முதலாவது டிஜிற்றல் கலை அருங்காட்சியகமாக தாமரைக் கோபுரத்தை வடிவமைத்துள்ளோம். இதன்மூலம் புனித வெசாக் பௌர்ணமியின் மகத்துவத்தை மக்கள் டிஜிற்றல் அனுபவம் வாயிலாக இரசிக்கக்கூடியதாக அமைத்துள்ளோம்"- என்றார். (எ)

# பெரமுனவின் செயல்பாட்டு பிரதானியாக ஜோன்ஸ்டன்!

கொழும்பு, மே 11

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய செயல்பாட்டு பிரதானியாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த விசேட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை நிறுவுவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கான குழுவையும் அந்தக் கட்சி அமைத்துள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், புதிய செயல்பாட்டு பிரதானி ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக ஆகியோர் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றனர். (ஐ)

# அரசமைப்பு சபை செயலாளர் பதவியிலிருந்து விலகுகிறார்!

கொழும்பு, மே 11

அரசமைப்பு சபையின் செயலாளராக பணியாற்றிய முன்னாள் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அந்தப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதாக அவர் அரசமைப்பு சபைக்கு அறிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அவரின் பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

பாராளுமன்ற செயலாளர் நாயகமாக பணியாற்றிய தம்மிக்க தசநாயக்க கடந்த 2023 மே 25ஆம் திகதி அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர், அரசமைப்பு சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அரசமைப்பு சபையின் செயலாளர் பதவிக்காக அவருக்கு சுமார் 5 இலட்சம் ரூபாய் கொடுப்பனவும் ஓர் உத்தியோக பூர்வ வாகனமும் பிற வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# தமிழ்வழியில் பொறியியல், மருத்துவம்!

கலாநிதி பா.இறையரசன்

கலைகளைத் தமிழில் கற்றுக் கொடுக்கலாம், அறிவியலைத் தமிழில் கற்றுக் கொடுக்க முடியுமா? என்று பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல், பல அறிஞர்களுக்கும் ஐயம் எழுகிறது. தமிழர்கள் ஓவியம், சிற்பம் , கட்டடம், வானியல் முதலிய கலைகளில் வல்லவர்கள் என்பதைக் கோயில்களின் வழி அறியலாம். ஆயினும், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகள் இல்லை என்று சிலர் கருதுகின்றனர்.

தமிழர்கள் பொறியியலில் பெற்றிருந்த வளர்ச்சியை கரும்பாலை, இரும்பாலை, கொல்லர் உலை ஆகியவற்றால் அறியலாம். கட்டடக் கலை வளர்ச்சியைக் கோயில்களும் அரண்மனைகளும் காட்டுகின்றன. நீர் மேலாண்மையை ஆறு, ஏரி உள்ளிட்டவையும் கல்லணையும் கூறுகின்றன.

தமது 'விஜயா' இதழில், பாரதியார் தமிழ்த் தொழிலாளிகள் விமானம் கட்டினார்கள் என்று மகிழ்ந்து எழுதினார். 'திருச்சிராப்பள்ளியில் இயந்திரத் தொழில் வேலையையும் மின்சார சக்தியின் வேலையையும் படிப்பித்துக் கொடுக்கும் ஓர் புதிய வித்யாசாலை' யை ஆங்கிலேய அரசு தொடங்கியதை மகிழ்ந்து வரவேற்று 10.02.1910 - இல் எழுதியுள்ளார்.

'ஓவச் செந்நூல்' என ஓவியக் கலை பற்றிய நூலைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. கட்டடக் கலைஞர்கள் 'நூலறி புலவர்' எனச் சங்க காலத்தில் கூறப்பட்டுள்ளனர். திருவள்ளுவர் உழவின் பெருமையைப் பாடியுள்ளார். கம்பர் எழுதிய 'ஏர் எழுபது' உழவின் பெருமையைக் கூறும். அந்நூலுக்கு எழுதப்பட்டுள்ள உரை 300 ஆண்டு பழமையானது. அது உழவியல் செய்திகளையும் மழைக்கேற்ற வானிலை பற்றியும் அக்கால வரலாற்றையும் கூறுகிறது.

மருத்துவக் கல்வியைத் தமிழில் நடத்த முடியுமா? மருத்துவம், புதிய கருவிகள் மேலை நாட்டில் வளர்ந்துள்ளன. இவற்றை எப்படித் தமிழில் கூற முடியும் என்று சிலர் மலைத்து நிற்கின்றனர்.

சங்கக் காலத்தில் (ஏறத்தாழ 2000 ஆண்டுகள் முன்) மருத்துவர்கள் இருந்தனர். ஊசி கொண்டு தைப்பதைக் கம்பர் பாடியுள்ளார். அறுவை மருத்துவம் இருந்தது. திருவள்ளுவர் 'மருந்து' என்றே ஓர் அதிகாரத்தைப் பாடியுள்ளார். திருமூலர் பத்தாம் நூற்றாண்டில் இருந்த சித்தர். மூச்சுப் பயிற்சி (பிரணாயாமம்), உடற்காப்பு பற்றி கூறுகிறார்.



மூச்சுப் பயிற்சி மருத்துவம் 'மோக்சா' மருத்துவம் என இன்றும் வழங்குகிறது. சீனர்களின் குத்தூசி (அக்குபஞ்சர்) மருத்துவம் தமிழக வர்ம மருத்துவம் அடிப்படை என்கின்றனர்.

குணபாடம், அகத்தியர் வைத்தியம், போகர் வைத்தியம், சரபேந்திரர் வைத்தியம், வாகடம் (மாடு, ஆடு, குதிரை முதலிய விலங்குகளுக்கான மருத்துவம்) முதலிய பல நூல்கள் சித்தர்களால் செய்யுள் வடிவில் எழுதப்பட்டவை.

அவை, ஏறத்தாழ 15 - 16 -ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சித்த மருத்துவர்களிடையே வழங்கின. கண்நோய் பற்றிய விளக்கத்துக்கு வரைந்து கொடுத்துள்ளார் மன்னர் சரபோசி (அவர் ஓவியக்கலையிலும் வல்லவர்). பாவே மாணிக்க நாயக்கர் பொறியாளர் என்பதுடன் சிறந்த ஓவியரும் ஆவார். அவர் எழுதிய அறிவியல் கட்டுரைகள் கிடைக்கவில்லை.

சாமுவேல் ஃபிஷ் கிரீன் 1860 - இல் தமிழில் மருத்துவ நூல்களை மொழி பெயர்த்துப் பாடமாக இலங்கையில் நடத்தியிருக்கிறார்.

'உடற்கூற்று வண்ணம்' என்பது நூறாண்டுகளுக்கு முன்பு அச்சில் வந்த பழமையான சித்த நூல். ஜப்பானில் நூறாண்டுகளுக்கு முன்பு தமிழில் அச்சிடப் பெற்ற உடல் கூற்றியல் (அனாடமி) பற்றிய நூல் வண்ணப் படங்களோடு வந்திருந்தது.

'பஞ்சபூதக்கலைகள் மெத்த வளருது மேற்கே, அக்கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்றார் பாரதி. பல அறிவியல் நூல்கள் தமிழ் அறிஞர்கள் கற்றார்கள், தமிழிலும் மொழி பெயர்த்தனர்.

மாடு, குதிரை முதலிய விலங்குகளுக்கான மருந்துகள் கூறும் வாகட நூல்கள் செய்யுளில் இருந்தன. கால்நடை மருத்துவம் பற்றிய முதல் மொழி பெயர்ப்பும் புத்தாக்கமும் கொண்ட பாடப்புத்தகம் வெ.ப.சு.முதலியாரின் 'இந்து தேசத்துக் கால்நடைக்காரரின் புத்தகம்' ஆகும்.

இலட்சுமணசாமி முதலியார் மகப்பேறு (பிரசவம்) பற்றி ஆங்கிலத்தில் நூல் 1938 - இல் எழுதினார். இந்நூலைப் பிற மாநிலத்தாரும் நாட்டாரும் பின்பற்றினர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 1995 ஆண்டுகளில் மருத்துவப் படிப்புக்கான 14 நூல்கள் , பொறியியல் படிப்புக்கான 13 நூல்கள்ல தமிழில் அச்சிடப்பட்டன. பிற பல நூல்கள் கையெழுத்து வடிவில் அச்சாக்கம் பெறக் காத்திருக்கின்றன. இப்போது பாட நூல் நிறுவனமும் நூல்கள் அச்சிட்டுள்ளது.

குணபாடம் 1968 -இலும், பின் 1850 -ஆம் ஆண்டு காலத்தில் வெளிவந்த பிஷ்கிறீன் நூலை மொழி பெயர்த்து உடற்கூறு 1972 - ஆண்டு காலத்திலும் மருத்துவர் இரா. தியாகராாசன் எழுதி வெளியிட்டுள்ளார்.

சித்த மருத்துவக் கல்லூரிகளில் 1990 -ஆம் ஆண்டுக்குப் பின், ஆங்கிலம் நுழைந்தது. மெல்ல மெல்ல, உடலியல், உடற்கூறியல் ஆகிய பாடங்களை ஆங்கில நூல்களை வைத்துக் கற்பிக்கலாயினர் இன்றும் ஆங்கில நூல்களே பாட நூல்களாக உள்ளன.

(14ம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 11.05.2025 - 17.05.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 28
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் விருந்துகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகள் மூலமும் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். புதிய தொழில் தொடர்புகள், அரசு வகை ஆதாயங்களும் ஏற்பட்டு தொழில் மேன்மை அடையும். நண்பர்கள், மற்றும் உறவுகளிடம் சுமூகமாக நடந்து கொண்டால் கருத்து பேதங்கள் தவிர்க்கலாம். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் வராத விருந்தினர் வருகையால் வீட்டில் கும்மாளமும், குஷியும் இருக்கும். செலவுக்கும் குறைவிருக்காது. உறவுகளின் ஒற்றுமை ஓங்கும். மிகவும் அன்பு காட்டும் பெண்களின் ஆதரவால் லாபம் ஏற்படும். குழந்தைகளின் சுட்டித்தனம் மற்றும் சேட்டைகளை கண்டு மனம் மகிழ்ச்சி அடையும். அரசு வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்து ஏற்றம் உண்டாகும். தொழிலில் இலாபம் அடைய புதிய யுக்திகளை கடைப்பிடிப்பீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் குடும்பத்தினர் உல்லாசப் பொழுது போக்குகளும் விருந்தினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். தொழிலில் ஏற்படும் முழு ஈடுபாடு காரணமாக தாராளமான பணவரவு இருக்கும். சிலருக்குப் பருவ மாற்றம் காரணமாக சளி, தலைவலி, காய்ச்சல் என சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம். வீட்டில் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக வெறுப்பு ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகளை படைப்பீர்கள். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பெண்கள் சல்லாபம், முயற்சிகளில் வெற்றி போன்றவற்றால் மனம் மகிழும். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு சிறப்பான பலன்கள் ஏற்படும். கல்வி யில் தேர்ச்சியும், தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்ப டும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பா திப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்குப் பண விஷயமான சிந்தனைகள் தலைதூக்கும். ஆரோக்கிய பாதிப்பு, காவல்துறையினர் மூலம் அச்சம் ஆகி யவை ஏற்படலாம். திட்டமிடப்பட்ட பயணங்களில் தடைகள் ஏற்படலாம். பிறரைக் கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களை தவிர்ப்பது நல்லது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். வீட்டில் அமைதியை நிலைநாட்ட வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவுகளை குறைத்து சிக்கனமாக இருந்தால், பண முடைகளைத் தவிர்க்கலாம். ஆயினும், எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் தன வருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். உறவுகள் வருகையால் உள் ளம் மகிழும். அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். தொழிலில் மிகப் பெரிய சாதனைகள் புரிவார்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதால் இழப் பைத் தவிர்க்கலாம். தேவையற்ற அலைச்சல் தரும் பயணங்களால் தேக சுகம் குறையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் ஆக்கமும், ஊக்கமும் பெருக சுயமாக சம்பாதிக்கும் வழிமுறைகள் கண்டறிவீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இல்லத்தரசியின் உதவிகள் கை கொடுக்கும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் தாராளமான தன வரவு வரும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். குழந்தைகளின் நடவடிக்கைகள் சந்தோஷத்தை தரும். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். மனதில் ஏற்பட்ட விருப்பங் கள் அனைத்தும் நிறைவேறும். அரசுத் துறையில் பணிபுரிபவர்கள் நீங்கள் விரும்பிய இடத்திற்கு மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து ஏற்படும் பணவரவால், இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். இறைவழிபாட்டால் இன்பமும் அமைதியும் சேரும். ஆயினும், மனதில் ஏதோவொரு வித பயம் நிலவும். மதிப்பு மிக்க பெரியவர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும். தாயார் வகையில் இலாபமும், கற்பனை வளமும் பெருகும். சிலருக்குச் சுறுசுறுப் பற்ற நிலையாலும், மந்த புத்தியாலும் காரியத் தடைகள் ஏற்படலாம். மேலதிகாரிகளின் ஆதரவால் மேன்மை அடைவீர்கள். மகான்களின் ஆசியும் தொழில் நிலையில் முன்னேற்றம் ஏற்படும்.

# தமிழ் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் பயனற்றுப்போன அரசியல் பாதையில் மீண்டும் செல்வதற்கான அங்கீகாரம் அல்ல



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த ஆறு மாத கால செயல்பாடுகள் மீதான தேசிய அளவிலான ஒரு வாக்கெடுப்பாக நோக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் நிருவாகம் மக்களின் ஆதரவை இழக்கத் தொடங்கிவிட்டது என்பதை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது.

ஏழு மாதகால இடைவெளியில் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் வெற்றியைப் பெற்றிருக்கும் தேசிய மக்கள் சக்தி 339 உள்ளூராட்சி சபைகளில் 265 சபைகளில் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றிய தனியான பெரிய அரசியல் கட்சியாக விளங்குகிறது. ஆனால், அதன் வாக்குகள் கடுமையான அளவுக்கு வீழ்ச்சிகாணத் தொடங்கியிருக்கிறது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் திசாநாயக்க 41.31 சதவீதமான வாக்குகளைப் பெற்றார். இரு மாதங்களுக்கு பிறகு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 61.56 சதவீதமான வாக்குகளைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான (159) ஆசனங்களைக் கைப்பற்றி சாதனை படைத்தது. ஆனால், ஆறு மாதகால இடைவெளியில் கடந்த வாரத்தைய உள்ளூராட்சி தேர்தல்களில் அதன் வாக்குகளில் 18 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

பாரம்பரியமான அதிகார வர்க்க அரசியல் கட்சிகளை எல்லாம் நிராகரித்த மக்கள் பாரிய எதிர்பார்ப்புகளுடனும் பிரமாண்டமான ஆதரவுடனும் முதல் தடவையாக பதவிக்கு கொண்டு வந்த ஒரு இடதுசாரிக் கட்சியின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்த செல்வாக்கு வீழ்ச்சி பெரியதொரு பின்னடைவாகும். உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை பற்றி அரசாங்கத் தலைவர்கள் என்னதான் விளக்கங்களைக் கூறினாலும், யதார்த்த நிலைவரத்தை அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கமுடியாது.

எதிர்பார்க்கப்பட்டதை போன்று வாக்களிப்பதில் மக்களின் ஆர்வமும் கணிசமானளவுக்கு குறைந்திருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் 79.46 சதவீதமாகவும் பாராளுமன்ற தேர்தலில் 68.93 சதவீதமாகவும் இருந்த வாக்களிப்பு உள்ளூராட்சி தேர்தல்களில் 55 சதவீதத்துக்கும் 60 சதவீதத்துக்கும் இடைப்பட்டதாகவே இருந்தது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகளையும் விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான வாக்குகளை ஆளும் கட்சி பெற்றிருக்கின்ற போதிலும், எதிரணி கட்சிகளின் வாக்குகளில் ஒரு அதிகரிப்பை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பாராளுமன்ற தேர்தலில் 17.66 சதவீதமான வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி இந்த தடவை 21.69 சதவீதமான வாக்குகளுடன் 14 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியிருக்கிறது. பாராளுமன்ற தேர்தலில் வெறுமனே 3.14 சதவீதமான வாக்குகளைப் பெற்ற ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன மொத்த வாக்குகளில் 9.17 சதவீதமான வாக்குகளை பெற்றிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் கூட அதன் வாக்குகளில் ஏற்பட்ட சொற்ப அதிகரிப்பு குறித்து ஒருவித திருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி 265 உள்ளூராட்சி சபைகளில் வெற்றியைப் பெற்றிருக்கின்ற போதிலும், 117 சபைகளில் பெரும்பான்மை உறுப்புரிமையைக் கொண்டிருக்கவில்லை. 120 சபைகளிலேயே எந்த பிரச்சினையும் இல்லாமல் அவர்களினால் நிருவாகத்தை அமைக்கக்கூடியதாக அறுதிப்பெரும்பான்மை கிடைத்திருக்கின்ற அதேவேளை, 30 சபைகளில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமானதாக இருக்கிறது. 117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சியினால் 48 ஆசனங்களை மாத்திரமே கைப்பற்றக் கூடியதாக இருந்தது.



> தங்களுக்கு தற்போது கிடைத்த வெற்றியை (தாங்கள் பங்கேற்காத கடந்தகாலப் போராட்டங்களை வெறுமனே நினைவு கூர்ந்துகொண்டு உணர்ச்சிமயமான கற்பிதங்களுடன் கூடிய கற்பனாவாத சுலோகங்களை எழுப்பும் (தோல்விகண்ட) அரசியல்பாதைக்கு தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக தமிழ்க்கட்சிகள் நம்பினால் மீண்டும் தவறிழைப்பதாகவே அமையும்.

உள்ளூராட்சி தேர்தல்களில் மகத்தான வெற்றியைப் பெறுவதற்காக தேசிய மக்கள் சக்தி அதன் அதிகாரத்துக்கு உட்பட்ட சகலதையும் செய்தது. ஜனாதிபதி திசாநாயக்க, பிரதமர் ஹறிணி அமரசூரிய மற்றும் அமைச்சர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு பூராகவும் தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டார்கள். எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள் வரக்கூடிய உள்ளூராட்சி சபைகளுக்கு நிதியை ஒதுக்குவது தொடர்பில் ஜனாதிபதி ஒரு எச்சரிக்கையையும் கூட மறைமுகமாக விடுத்தார். எதிர்க்கட்சிகளின் பிரசாரங்கள் மிகவும் உற்சாகம் குன்றியவையாகவே காணப்பட்டன. தேர்தல்கால வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதை தவிர, எதிர்க்கட்சிகளினால் மக்கள் முன்னிலையில் உருப்படியான ஒரு செயற்திட்டத்தையும் முன்வைக்க முடியவில்லை. இழந்த செல் வாக்கை மீளப்பெறுவதற்கு அந்த கட்சி கள் பிரயத்தனங்களை செய்கின்ற போதி லும், தீர்க்கமான மீள்வருகை குறித்து அவை தற்போதைக்கு நினைத்துப் பார்க்க முடியாது.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியும் அதன் செல்வாக்கு குறைந்து வருகின்றது என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. தங்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற முறையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையவில்லை என்பதை மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை ஜனாதிபதியும் அரசாங்க தலைவர்களும் இனிமேலாவது விளங்கிக்கொள்ள வேண்டும். வெறுமனே புதிய அரசியல் கலாசாரம் மற்றும் முறைமை மாற்றம் பற்றிய வார்த்தை ஜாலங்களை விடுத்து பயனுறுதியுடைய செயற்பாடுகளில் அரசாங்கம் முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க, பெருவாரியான உள்ளூராட்சி சபைகளில் நிருவாகங்களை தனியாக அதன் சொந்தத்தில் அமைப்பதில் தேசிய மக்கள் சக்தி பிரச்சினைகளை எதிரநோக்குகின்ற போதிலும், மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகளுடன் இணைந்து செயற்படப்போவதில்லை என்று ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அறிவித்திருக்கிறார். முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் இடம்பெற்றதைப் போன்று மற்றைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு பணத்தையும் பதவிகளையும் தருவதாக ஆசைகாட்டும் கைங்கரியங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இறங்காது என்று எதிர்பார்க்கலாம். ஆனால், தங்களுடன் சேர்ந்து பணியாற்ற விரும்பும் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் தனிநபர்களின் ஆதரவுடன் நிருவாகங்களை அமைப்பது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக சில்வா கூறியிருக்கிறார்.

பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சியை உளளூராட்சி நிருவாகங்களை அமைக்க அனுமதிக்க வேண்டும் என்பதும் மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகள் பெற்ற வாக்குகள் எல்லாவற்றையும் கூட்டிப்பார்த்து அதை மக்களின் ஆணையாக வியாக்கியானம் செய்ய முடியாது என்பதும் அவரது வாதமாக இருக்கிறது. ஆனால், ஆளும் கட்சியுடன் மோதுவதற்கு தங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை எதிரணி கட்சிகள் கைநழுவவிடப் போவதில்லை. எதிர்க்கட்சிகளுக்கு பெரும்பான்மை உறுப்புரிமை கிடைத்திருக்கும் உள்ளூராட்சி சபைகளில் நிருவாகத்தை அமைப்பதற்காக இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்திருக்கிறார். கூட்டாக நிருவாகங்களை அமைப்பதற்கு ஒத்துழைப்பது குறித்து ஆராய விரும்புவதாக ஐக்கிய தேசிய கட்சியும் அறிவித்திருக்கிறது.

எதிர்க்கட்சிகள் குறிப்பாக பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியும் எந்தளவுக்கு ஒத்துழைத்துச் செயற்பட முன்வரும் என்பதை அவை கொழும்பு மாநகர சபை விவகாரத்தை கையாள்வதில் கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறையின் மூலம் விரைவில் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னரான வாரங்களில் சில சுவாரஸ்யமான அரசியல் நிகழ்வுப் போக்குகளை காணக்கூடியதாக இருக்கும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் இந்த தடவை வித்தியாசமான ஒரு பரிமாணத்தை எடுத்தது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் இரு மாகாணங்களிலும் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றியதே அதற்கு காரணமாகும். குறிப்பாக, இலங்கை தமிழ்த் தேசியவாத அரசியலின் கோட்டையாக கருதப்படும் யாழ்ப்பாணத்தில் ஆறு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது.

தமிழ் அரசியல் கட்சிகளின் எதிர்காலம் குறித்து கேள்விகள் கிளம்பின. தமிழ் மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தங்களுக்கு பாடத்தைப் புகட்ட விரும்பினார்கள் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஒத்துக்கொண்டார்கள். அதனால், உள்ளூராட்சி தேர்தல்களில் சகல தமிழ்க்கட்சிகளுமே தேசிய மக்கள் சக்தியை 'பொது அரசியல் எதிரியாக' கருதி அதற்கு எதிராக தீவிர பிரசாரங்களை முன்னெடுத்தன. ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுன போன்ற முன்னைய ஆளும் கட்சிகளுக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத அளவுக்கு தேசிய மக்கள் சக்தியும் ஒரு சிங்கள இனவாத சக்தியே என்று தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு கூறினார்கள்.

தமிழ்த் தேசியவாதத்தின் இருப்பை உறுதி செய்யவும் தேசியவாத உணர்வை தமிழ் மக்கள் இழந்துவிடவில்லை என்பதை நிரூபிக்கவும் உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கேட்டுக்கொண்டன. மக்களும் அந்த கட்சிகளுக்கே அதிகப் பெரும்பான்மையாக வாக்ளித்தார்கள்.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 16 வருடங்களில் தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகள் மீதான வெறுப்பு காரணமாக பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கணிசமானளவில் வாக்களித்த தமிழ் மக்கள் தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு உட்பட தங்களது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் வெளிக்காட்டிய அலட்சிய மனோபாவம் காரணமாக மீணடும் தமிழ்க்கட்சிகள் பக்கமாக திரண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை முற்றாக ஓரங்கட்டிவிட்டார்கள் என்று கூறமுடியாது. ஆளும் கட்சியும் தமிழ்ப்பகுதிகளில் கணிசமான உளளூராட்சி ஆசனங்களை கைப்பற்றியிருக்கிறது. இரு மாகாணங்களிலும் எட்டு மாவட்ங்களிலும்

(14ம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை அரசாங்கம் எவ்வாறு நோக்க வேண்டும்?



கலாநிதி ஜெகான் பெரேரா

நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட - பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்கள் அண்மைக்காலத்தில் நாம் கண்டிராத அளவுக்கு அரசாங்க அதிகார துஷ்பிரயோகங்கள் இல்லாமல் முடிவடைந்தன. முன்னைய அரசாங்கங்களினால் முன்னைய தேர்தல்களின்போது செய்யப்பட்டதைப் போன்ற பெருமளவிலான துஷ்பிரயோகங்கள் இல்லாமல் இந்த தேர்தல்கள் நடைபெற்றதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூறியிருக்கின்றன.

ஆளும் தேசிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சி பெற்ற வாக்குகளின் இரண்டு மடங்கையும் விட கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கிறது. ஆனால், கடந்த வருடத்தைய இரு தேசிய தேர்தல்களிலும் வடக்கு, கிழக்கில் அதற்கு கிடைத்ததைப் போன்ற வலிமையான ஆதரவை இந்த தடவை பெறமுடியவில்லை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகள் விசேட முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும்.

பெருமளவிலான ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பபட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களை சட்டத்தின் முன்னிறுத்தத் தவறியமை, ஊழல் ஆழமாக வேர்விட்டிருக்கின்ற அரசாங்க திணைக்களங்களில் ஊழலை தடுத்து நிறுத்தத் தவறியமை, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்கத் தவறியமை மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற கொடுமையான சட்டங்களை இரத்துச் செய்யத் தவறியமை உதாரணங்களாகக் கூறப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் முன்னாள் போர் வலயங்களில் காணாமல் போனோர் மற்றும் விசாரணை எதுவுமின்றி நீண்டகாலமாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும் இராணுவத்தினால் அபகரிக்கப்பட்ட காணிகளை அவற்றின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளிப்பதற்கும் அரசாங்கம் காலத்தைக் கடத்திக்கொண்டு போகின்றது என்ற உணர்வு மக்கள் மத்தியில் இருக்கிறது. மிகவும் அண்மையில் புதிய ஒரு பிரச்சினை கிளம்பியிருக்கிறது. அதாவது மூன்று மாதகாலத்தில் தனியாரினால் உரிமை கோரப்படாத பட்சத்தில் வடமாகாணத்தில் சுமார் 6000 ஏக்கர் நிலங்கள் அரச நிலம் என்று பிரகடனப்படுத்தப்படும் என்று அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கிறது.

மூன்று மாதகாலத்தில் அந்த நிலங்கள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் என்ற அறிவிப்பு நடைமுறைச் சாத்தியமற்ற காலக்கெடுவுடன் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு இரக்கமற்ற செயலாக நோக்கப்படுகிறது. ஏனென்றால், அந்த நிலங்கள் 30 வருடங்களுக்கும் அதிகமான காலமாக இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தவை என்பதுடன் மக்களால் அங்கு செல்லக்கூடியதாக இருக்கவுமில்லை. மேலும், உரிமை கோரப்படாத நிலங்கள் அரச நிலங்களாக்கப்படும் என்ற அறிவிப்பு வர்த்தமானியின் நோக்கம் குறித்து கேள்விகளை எழுப்புகிறது.

இது வடக்கு, கிழக்கில் அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரங்களை பெரிதும் பாதித்திருக்கக்கூடியதும் சாத்தியம். முன்னொருபோதும் இல்லாத வகையில் அந்த பிராந்தியங்களில் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்களுக்காக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கபினெட் அமைச்சர்களின் உயர்மட்ட விஜயங்கள் இடம்பெற்றன. ஆனால், மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு அவை போதுமானதாக இருக்கவில்லை.

தமிழ்க்கட்சிகள் பிளவுபட்டிருந்ததுடன் தலைவர்களுக்கு இடையிலான ஆளுமைப் போட்டிகள் காரணமாக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைக்க முடியாமல் போனதால் கடந்த வருடம் நவம்பரில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அவற்றினால் தமிழ் மக்களின் போதுமான ஆதரவைப் பெறமுடியவில்லை. இந்த கட்சிகளிடம் ஐக்கியமும் நேர்மறையான நிகழ்ச்சித்திட்டமும் இல்லாமல் இருந்த சூழ்நிலை ஆளும் கட்சி தன்னை ஒரு நம்பகமான மாற்று அரசியல் சக்தியாக

> **பல்லின - பன்முக அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையாக அன்றி மத்தியமயப்படுத்தப்பட்ட செயன்முறையை முன்னெடுக்கும் அரசாங்கத்தின் பரீட்சார்த்தம் தமிழ், முஸ்லிம் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.**



குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு காண்பிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியது. தலைமுறை இடைவெளியும் ஒரு காரணியாக இருந்திருக்கக்கூடும்.

கடந்தகால அரசியல் கதையாடல்களில் பெருமளவுக்கு அக்கறையில்லாத இளம் வாக்காளர்கள், வேட்பாளர்களை அவர்களின் செயற்திறமை, வெளிப்படைத்தன்மை மற்றும் வாய்ப்புக்களின் அடிப்படையில் மதிப்பிடக்கூடியவர்களாக இருந்தார்கள். அதனால் ஆளும் கட்சியின் அணுகுமுறையை அவர்கள் விரும்பியிருக்கக்கூடும். அதன் விளைவாக, ஆளும் கட்சி முன்னென்றும் இல்லாத வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் (மட்டக்களப்பு மாவட்டம் தவிர) பெரும்பான்மையான ஆசனங்களைப் பெற்றது. ஆனால், பல்வேறு காரணங்களின் நிமித்தம் அந்த மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் கட்சியினால் அதே ஆதரவை தக்கவைக்க முடியவில்லை.

முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இந்த தடவை உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் அரசியல் கட்சிகளினால் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு பிரசாரத்தை செய்யக்கூடியதாக இருந்தது. காணாமல் போருக்கான நீதி, இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும் காணிகளை உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளித்தல், நீண்டகா லமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதி களை விடுதலை செய்தல், வரலாற்று ரீதி யாக தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமாவையாக இருந்துவரும் நிலங்களை பௌத்த ஊடுருவலில் இருந்து பாதுகாத்தல் ஆகியவை முக்கிய பிரச்சினைகளாகும்.

பொருளாதார அபிவிருத்தி முக்கியமானது என்கிற அதேவேளை, மெய்யான அரசியல் சுயாட்சிக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் அது பதிலீடாக அமையாது என்று தமிழ்க்கட்சிகள் மக்களுக்கு கூறின. வடக்கில் தனியாருக்கு சொந்தமான காணியில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டது தொடர்பான காணிப் பிரச்சினை ஒன்றை தீர்த்து வைப்பதற்கு தவறியமையை பெரும்பான்மையின உணர்வுகளுக்கு மாத்திரம் அரசாங்கம் மதிப்புக் கொடுக்கிறது என்பதன் பிரதிபலிப்பாக அவை சுட்டிக்காட்டன.

மேலும், வடக்கு,கிழக்கில் இருந்து கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியில் இருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களின் கடந்த நான்கு மாதகால செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றன. பாராளுமன்றத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதே தெரியாமல் இருக்கிறது. தமிழ்ப் பகுதிகளிலும் கூட அவர்கள் பெரிதாக பேசுவதில்லை. தங்களது செயற்பாடுகள் மூலமாக அவர்கள் தங்களை தெரிவுசெய்த மக்களை கவரவில்லை.

அவர்கள் அரசியலில் அனுபவம் இல்லாதவர்களாக இருப்பதுடன் ஆளும்கட்சிக்குள் ‘உள்வீட்டுக்காரர்களாகவும்” இல்லை. அதனால் அவர்களினால் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிகரானவர்களாகவும் செயற்பட முடியவில்லை. சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மக்களுக்கு விளக்கிக் கூறக்கூடிய அல்லது நியாயப்படுத்தக்கூடிய நிலையிலும் அவர்கள் இல்லை. இனத்துவ அடிப்படையில் அதிகாரப் பகிர்வுக்கான தேவையைக் குறைக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தி மீது அரசாங்கம் கவனத்தைக் குவித்திருக்கிறது என்பதையும் மக்களுக்கு விளக்க அவர்களால் முடியவில்லை.

அரசாங்கத்தின் மார்க்சிய அடிப்படையிலான அரசியல் கோட்பாடு நல்லிணக்கத்தை கட்டமைப்பு ரீதியிலான சமத்துவம் மற்றும் பொருளாதார நீதியின் வழியிலேயே நோக்க முற்படும். இன, மத அடையாளத்தின் மீது அது கவனத்தைச் செலுத்தாது. ஆனால், இவை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் நீண்டகாலக் கோரிக்கைகளாக இருந்து வருகின்றன. பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் செய்துகாட்டியதைப் போன்று உள்ளூராட்சி தேர்தல்களிலும் அரசாங்கம் மக்கள் ஆதரவு அதற்கு இருப்பதை வெளிக்காட்டியிருந்தால், இனத்துவ அடிப்படையில் அன்றி சமத்துவத்தின் அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதன் அணுகுமுறைக்கு ஜனநாயக ரீதியிலான ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது என்று வலுவான முறையில் நியாயப்படுத்தக் கூடியதாக இருந்திருக்கும்.

ஆனால், அரசாங்கத்துக்கு அத்தகைய ஒரு இரண்டாவது ஆணை அங்கு கிடைக்கவில்லை. பல்லின - பன்முக அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையாக அன்றி மத்தியமயப்படுத்தப்பட்ட செயன்முறையை முன்னெடுக்கும் அரசாங்கத்தின் பரீட்சார்த்தம் தமிழ் முஸ்லிம் மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு விசேடமாக இந்தியாவிடம் இருந்து மாத்திரமல்ல மேற்குலக நாடுகளிடம் இருந்தும் அரசாங்கம் தற்போது சர்வதேச நெருக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது. மாகாண சபைகள் ஒரு காலத்தில் பெருமளவு சுயாட்சிக்கான பாதையாக நோக்கப்பட்டன. தேர்தல்களை நடத்தி மக்களினால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளின் ஊடாக மாகாணசபைகளை மீண்டும் செயற்பட வைத்து - அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தின் கட்டமைப்பில் மாத்திரம் தங்கியிராமல் அதிகாரப்பகிர்வு தொடர்பான பரந்தளவிலான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் மூலம் தமிழ் மக்களின் கரிசனைகளை தீர்க்கக்கூடியதாக இருக்கும்.

வடக்கு, கிழகசு மாகாணங்களில் உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளை அரசாங்கம், தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளை எதிரிகளாக அல்லது போட்டிக்குரியவையாக நோக்காமல் கூட்டுப் பங்காண்மையுடன் பணியாற்றுவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பாக நோக்கவேண்டியது அவசியமாகும். பெரும்பான்மையினத்தவர்கள் மத்தியில் வலிமையான ஒரு ஆதரவுத்தளம் தனக்கு தொடர்ந்தும் இருக்கிறது என்பதை அரசாங்கம் நிரூபித்திருக்கிறது. நாட்டை மாற்றியமைப்பதற்கும் முறைமை மாற்றத்தைச் செய்வதற்கும் சட்டங்களையும் அரசியலமைப்பையும் மாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலம் இருக்கிறது.

தேசிய கலந்தாலோசனைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற்று அத்தகைய மாற்றங்களை அரசாங்கம் எந்தளவுக்கு கொண்டுவருகிறதோ அந்தளவுக்கு அந்த மாற்றங்கள் நிலைபேறானவையாக இருக்கும். உள்ளூராட்சி தேர்தல்களின் முடிவுகளுக்கு பிறகு அரசாங்கம் வாக்குறுதிகளில் இருந்து பயன்விளைவுகளை காட்டுவதை நோக்கி நகர வேண்டியதும் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் அதை விரைவாகச் செய்ய வேண்டியதும் அவசியமாகும்.

பனங்காட்டான்

# தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை யார் கொலோ சதுரர்!

திருவாசகத்தின் எட்டாம் திருமுறையின் சில வரிகளைத் தலைப்பாகக் கொண்டு கடந்த ஆறாம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் விடயங்களில் உலாவுவது பொருத்தமாகத் தெரிகிறது.

நாட்டை யார் ஆண்டாலென்ன, எங்கள் மண்ணை அவர்கள் கொள்ளையிட அனுமதிக்கக் கூடாதென்ற நேரிய சிந்தனையை முன்னிறுத்தி தமிழ் மக்கள் நடத்திய வாக்குப் போரில் தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரளவுக்கு நிம்மதி மூச்சு விடும் தீர்ப்பு கிடைத்துள்ளது.

இறுதி நேரத்தில்கூட ஒன்றுபட்டு ஒரே குரலில் தமிழ்த் தேசியம் என்று தேர்தலைச் சந்திக்க மறுத்த தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தேர்தலின் பின்னர் ஒருவரையொருவர் கட்டியணைத்து கதிரையில் ஏறத் துடிப்பதை கடந்த நான்கைந்து நாட்களாக பார்க்க முடிகிறது.

இதுபற்றி கொஞ்சம் விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர், தெற்கில் இந்தத் தேர்தல் முடிவு என்ன செய்தியைத் தெரிவித்துள்ளது என்று பார்ப்பது அவசியம். ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சி நடத்தும் ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தியே இத்தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளது. நாடாளாவிய ரீதியில் நாற்பத்தைந்து லட்சத்துக்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்று 265 உள்ளூராட்சிச் சபைகளில் முன்னணிக்கு வந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளில் சுமார் இருபது லட்சம் இம்முறை குறைந்துள்ளதை சுட்டிக்காட்டும் எதிரணிகள் ஆளும் தரப்பு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டதாக தெரிவிக்கின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முழு நாட்டிலும் மூன்றாவது இடத்தில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சி, உள்ளூராட்சித் தேர்தலில் ஆறாம் இடத்துக்கு வந்துள்ளமையை கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட இரண்டு கட்சிகளினதும் இன்றைய நிலைவரத்தைக் குறிப்பிட்டு சுட்டுவதற்கான காரணம், இப்போது இடம்பெற்றது உள்ளூர்களின் சிற்சபைகளுக்கான தேர்தல் என்பதால் வாக்கிறக்கம் இவ்வாறுதான் அமையும் என்பதை புரிய வைப்பதற்காகவே.

ஆனாலும் அரசியல் ரீதியில் ஆளும் அநுர தரப்புக்கு வாக்கு வங்கி சரிந்துவிட்டதென்பதை குத்திக் காட்டும் வகையில் எதிரணிகளின் அறிக்கைகள் வெளிவந்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சி அதன் வாக்குப் பலத்தை அதிகரித்துள்ளதென்று அதன் பிரதித் தலைவர் றுவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுனவுக்கு வாக்குகள் அதிகரித்துள்ளதை குறிப்பிட்டு இது இப்போதைய ஆரம்பம் என்று நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். இருபத்திரண்டு லட்சத்துக்கும் மேலான வாக்குகள் கிடைத்ததை மகத்தான முன்னேற்றம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில சபைகளில் இரண்டாவது இடத்துக்கு அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி வாக்குகளைப் பெற்றுள்ளது. இதனை சரித்திரபூர்வமான வெற்றி என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க விளாசியுள்ளார். இத்துடன் நிறுத்தாது சில தமிழ் கட்சிகள் ஆட்சியமைக்க தங்கள் ஆதரவைக் கோரியிருப்பதாகவும் ஊடகங்களுக்கு இவர் தெரிவித்துள்ளார். ஆனால், அமைச் சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் கட்சி கள் எதுவும் இதுவரை தங்களிடம் ஆதரவு கேட்கவில்லையென்று கூறி பிமல் ரத்நாயக்கவின் முகத்தில் கரி பூசியுள்ளார்.



**தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்படக்கூடாது என்பதற்காக தேசபற்று மக்கள் தங்கள் கடமையைச் செய்து அதனை வெற்றிபெற வைத்துள்ளனர். இந்த வெற்றியை தக்க வைத்து அதனை நிரந்தரமாக்கும் பொறுப்பு இக்கட்சிகளின் செயற்பாட்டில் தங்கியுள்ளது. எந்த ஒற்றுமையும் வெறும் கதிரைக்காகவே இருப்பின் தேசப்பற்று வாக்குகளின் மதிப்பு என்னாகும்? யார் கொலோ சதுரர்!**

வடக்கு கிழக்கைப் பொறுத்தளவில் தமிழரசுக் கட்சியே ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்றுள்ளது. எனினும், நிலையான ஆட்சியமைக்க சக தமிழ் கட்சிகளின் ஆதரவு இதற்குக் கிடைக்க வேண்டும். இவ்வாறான ஒரு நெருக்கடி நிலை ஏற்படுமென்பது நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்டது. இதன் காரணமாகவே தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைத்து ஒரே அணியாக களத்தில் நிறுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், தமிழரசின் பதில் செயலாளர் சுமந்திரனின் எதேச்சாதிகாரப் போக்கு அதற்கு இடமளிக்கவில்லை.

தமிழரசுக் கட்சி தனித்து ஆட்சியமைக்குமென்றும், மற்றைய தமிழ் தேசிய கட்சிகளை அரசியலிலிருந்து அப்புறப்படுத்தி விடலாமெனவும் சுமந்திரன் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. 2023ல் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் வேட்பாளர்கள் தாக்கல் செய்யப்பட்டபோது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சகோதர கட்சிகளை தனித்துப் போட்டியிடுமாறு வெளியேற்றியதன் பலாபலனே தமிழரசுக் கட்சியையும் இப்போது பல வீனப்படுத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாக கிளிநொச்சிப் பிரதேசத்தின் மூன்று சபைகளையும் அது தன் வசமாக்கியதைக் குறிப்பிட வேண்டும். இந்த வெற்றியின் மூலகர்த்தாவாக இயங்கியவர் இதன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன். கடந்த ஆண்டு இடம்பெற்ற கட்சியின் தலைவர் தெரிவில் தமக்குக் கிடைத்த வெற்றியை இத்தேர்தல் மூலம் அவர் நிரூபித்துக் காட்டியுள்ளார். தம்மைக் கட்சியில் ஓரங்கட்ட எத்தனிக்கும் சுமந்திரனை கிளிநொச்சியில் எந்தவொரு தேர்தல் கூட்டத்திலும் அனுமதிக்காதது மட்டுமன்றி, சுமந்திரனோடு இத்தேர்தலின்போது எந்த ஒரு மேடையிலும் சிறீதரன் ஏறாததையும் வரலாற்றுத் தேவைக்காக பதிவிட வேண்டும்.

இந்தத் தேர்தலில் முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டிய பிரதேசமாக வடமாகாணம் அமைந்திருந்தது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என ஒரு பட்டாளமே இங்கு முகாமிட்டிருந்து பிரசாரம் செய்தது. அது எதுவுமே பலனளிக்கவில்லை. ஆனால், வவுனியா மாநகர சபையின் எந்தவொரு வட்டாரத்திலும் தமிழரசுக் கட்சியால் வெற்றிபெற முடியாது போனதற்கு சத்தியலிங்கம் எம்.பி.யே காரணமென தெரிய வருகிறது. கடந்த பொதுத்தேர்தலில் தோல்வி கண்ட சத்தியலிங்கத்தை தேசிய பட்டியலூடாக எம்.பி.யாக்கியும் எந்தப் பலனும் கிடைக்கவில்லையென ஊடகங்களும், அரசியல் நோக்கர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையும் இத்தேர்தலில் பெரும் நெருக்குவாரத்துக்குள் இருக்கிறது. இருபத்தேழு வட்டாரங்கள் ஊடாகவும், பட்டியல் வழியாகவும் மொத்தம் நாற்பத்தைந்து உறுப்பினர்கள் இங்கு தெரிவு செய்யப்பட்டனர். கஜேந்திரகுமாரின் தமிழ் மக்கள் பேரவை 12, தமிழரசுக் கட்சி 13, தேசிய மக்கள் சக்தி 10 எனவும், தமிழ்த் தேசிய கூட்டணியும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் தலா 4 எனவும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பவை தலா 1 எனவும் இங்கே வெற்றி பெற்றன. ஆட்சியைக் கைப்பற்ற எந்தவொரு அணிக்கும் 23 எண்ணிக்கை தேவை. இங்கு ஆள்பிடி வேட்டை ஆரம்பமாகியுள்ளது. சேராத இடம் சேரும் கூட்டுக்கூட இங்கு ஏற்படலாமென சொல்லப்படுகிறது. தமிழரின் கலாசார தலைநகரில் இப்படியொரு சோதனை.

தேர்தல் இடம்பெற்று நான்காம் நாள் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஊடக சந்திப்பொன்றை நடத்தி தமிழ் காங்கிரஸ், ரெலோ, புளொட் உட்பட அனைத்தையும் இணைத்து மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்பட விரும்புகிறோம் என்று சக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். வரவேற்கப்பட வேண்டிய ஒரு முயற்சி இது.

தமிழரசுக் கட்சி தனி மனித தீர்மானம் எடுக்கும் கட்சி அல்ல எனவும், முன்பு அவ்வாறான நிலை இருந்ததென்றும், ஆனால் இப்போது அவ்வாறில்லை என்றும் இவர் மேலும் விபரித்துள்ளார். இங்கேதான் சில கேள்விகள் எழுகின்றன.

தேர்தல் இடம்பெற்ற மறுநாளே ஊடகங்களைச் சந்தித்த சுமந்திரன், தமிழரசுக் கட்சிக்கே இம்முறை பெருமளவு வெற்றி கிடைத்துள்ளதென்றும், தாங்கள் ஆட்சியமைக்க சக தமிழ் கட்சிகளின் ஆதரவு கிடைக்குமென்றும் தெரிவித்திருந்தார். மறுநாள், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் (மேயர்) பதவி தமிழரசுக் கட்சிக்கே உரியது என்றும் தமது இன்னொரு முடிவை தெரிவித்தார். அத்துடன் நிறுத்தாது தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மற்றைய கட்சிகள் சேர்ந்து இயங்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

இதன் பிரதிபலிப்பாக மூத்த போராளி மனோகர் (பசீர் காக்கா) விரிவான ஓர் அறிக்கையை பகிரங்கமாக வெளியிட்டார். தமிழ்த் தேசியத்தின் நன்மை கருதி தற்போதைய நிகழ்வுகளில் சுமந்திரன் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை போதிய ஆதாரங்களோடு இவரால் விடுக்கப்பட்ட அறிக்கைக்கு சகல ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இதன் பின்னரே சற்று வெளியே வந்த சி.வி.கே.சிவஞானம் கூட்டமைப்பின் முன்னைய பங்காளிகளை இணைத்து மீண்டும் தேசிய கூட்டமைப்பாக செயற்பட விரும்புகிறோம் என்ற அழைப்பை விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மூத்த போராளி மனோகர் துணிச்சலாக சுமந்திரனின் தன்னிச்சையான போக்கை சுட்டிக்காட்டி அறிக்கை விடாதிருந்தால், மீண்டும் கூட்டமைப்பாக இயங்குவோம் என்ற அறிக்கையை சி.வி.கே.சிவஞானம் வெளியிட்டிருக்க மாட்டார் என்று துணிந்து கூறலாம்.

எதுவோ, தமிழ்த் தேசியம் தோற்கக் கூடாதென்பதற்காக தேசப்பற்றுள்ள மக்கள் தங்கள் வாக்குகள் ஊடாக நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியை தெரிவித்துள்ளனர். இதனை எவ்வாறு செயல்படுத்துவதென்பது தமிழ்த் தேசிய பெயர் கொண்ட ஒவ்வொரு கட்சியினதும் கூட்டுப் பங்காகும். மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டனர். கட்சிகள் தங்கள் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றன. இதில் வெல்லப் போவது யார்?

(தந்தது உன் தன்னை, கொண்டது என் தன்னை, யார் கொலோ சதுரர்).

# தோனி கண்ணில் பட்ட இலங்கை பள்ளி மாணவன்: ஐ.பி.எல்லில் கலக்கும் இலங்கை வீரர்கள்

க. போத்திராஜ்

ஐபிஎல் தொடர் கடந்த 2008 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்தே, இலங்கை வீரர்களுக்கு குறிப்பிட்ட அளவு இடம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. சமாந்தா வாஸ், முத்தையா முரளிதரன், ஜெயவர்த்தனே, ஜெயசூர்யா என ஏராளமான நட்சத்திரங்கள் ஐபிஎல் தொடருக்கு அழகுகூட்டியுள்ளனர்.

ஒவ்வொரு ஐபிஎல் ஏலத்தின்போதும் இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர்கள், சுழற்பந்துவீச்சாளர்கள், ஆல்ரவுண்டர்களுக்கென தனி கிராக்கி ஏற்பட்டு அணிகள் போட்டிபோட்டு வாங்கியதுண்டு.

2025 ஐபிஎல் ஏலத்தில் மொத்தம் 19 இலங்கை வீரர்கள் பங்கேற்றனர்.

இலங்கை சார்பில், (இந்திய ரூபாயில்)
வனிந்து ஹசரங்கா (ரூ. 2 கோடி),
மகீஷ் தீக்சனா (ரூ. 2 கோடி),
விஜயகாந்த் வியாசகாந்த் (ரூ. 75 லட்சம்),
குஷால் மெண்டிஸ் (ரூ. 75 லட்சம்),
குஷால் பரேரா (ரூ. 75 லட்சம்),
நுவான் துஷாரா (ரூ.75 லட்சம்),
ஜாபர் வேன்டர்சே (ரூ. 75 லட்சம்),
பதும் நிசங்கா (ரூ.75 லட்சம்),
பனுகா ராஜபக்ஸ (ரூ.75 லட்சம்),
கமிந்து மெண்டிஸ் (ரூ.75 லட்சம்),
துஷ்மந்த் சமீரா (ரூ.75 லட்சம்),
சரித் அசலங்கா (ரூ.75 லட்சம்),
துனித் வெல்லாலகே (ரூ.75லட்சம்),
தில்சன் மதுசங்கா (ரூ.75 லட்சம்),
துஷான் ஹேமந்தா (ரூ.75 லட்சம்),
தசுன் சனகா (ரூ.75 லட்சம்),
லகிரு குமாரா (ரூ.75 லட்சம்),
ஈஷான் மலிங்கா(ரூ.30 லட்சம்),
துமிந்து செவ்மினா (ரூ.30 லட்சம்)
ஆகியோர் அடிப்படை விலையில் ஏலத்தில் பங்கேற்றனர்.

ஆனால், இதில் 7 பேர் மட்டுமே ஏலத்தில் அணிகளால் வாங்கப்பட்டனர்.

இதைத்தவிர மதிஷா பதிரணாவை ரூ.13 கோடிக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தக்கவைத்தது.

ஆல்ரவுண்டர் ஹசரங்காவை அடிப்படை விலையான ரூ.2 கோடியிலிருந்து கூடுதலாக விலை கொடுத்து ரூ.5.25 கோடிக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது.

அதேபோல சுழற்பந்துவீச்சாளர் தீக்சனாவை ரூ.4.40 கோடிக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது.



வேகப்பந்துவீச்சாளர் நுவான் துஷாராவின் அடிப்படை விலை ரூ.75 லட்சமாக இருந்தநிலையில் அவரை ரூ.1.60 கோடி கொடுத்து ஆர்சிபி அணி வாங்கியது.

இலங்கை அணிக்கே இன்னும் களமிறங்காத அன்கேப்டு வீரர் வேகப்பந்துவீச்சாளர் ஈஷான் மலிங்காவை ரூ.75 லட்சத்துக்குப் பதிலாக ரூ.1.20 கோடி கொடுத்து சன்ரைசர்ஸ் அணி வாங்கியது.

துஷ்மந்த் சமீராவையும் தசுன் சனகாவையும் டெல்லி கேபிடல்ஸ் வாங்கியது. இரு கைகளாலும் பந்துவீசும் திறமை கொண்ட கமிந்து மெண்டிஸை அடிப்படை விலையான ரூ.75 லட்சத்துக்கு சன்ரைசர்ஸ் அணி வாங்கியது.

### தோனியே அழைத்து அணியில் சேர்த்த வீரர்

2021 ஐபிஎல் ஏலத்தில் சிஸ்கே அணியால் மதிஷா பதிராணா வாங்கப்பட்டார். 2021 ஆம் ஆண்டில் கண்டியில் நடந்த பள்ளி மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டியை பார்த்த தோனி, பதிராணாவின் பந்துவீச்சால் ஈர்க்கப்பட்டு அவரை ஏலத்தில் எடுக்கக் கூறினார்.

பதிராணாவை கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்த ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணியில் இணையுமாறு தோனி கடிதம் எழுதினார்.

2022 ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் குஜராத் அணிக்கு எதிராக மதிஷா பதிராணா அறிமுகமாகி களமிறங்கினார்.

தோனியால் பட்டைதீட்டப்பட்ட பதிராணா 2023 ஐபிஎல் சீசனில் 12 போட்டிகளில் 19 விக்கெட்டுகளை சாய்த்தார். நடுப்பகுதி மற்றும் டெத் ஓவர்களில் சிஎஸ்கே பதிராணாவை பயன்படுத்தியது. 2025 ஏலத்தில் பதிராணாவை ரூ.13 கோடிக்கு சிஎஸ்கே அணி தக்கவைத்தது.




### ஆர்சிபியின் நம்பிக்கை வீரர்

இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சு ஆல்ரவுண்டர் வனிந்து ஹசரங்கா கடந்த 2021ம் ஆண்டு ஐபிஎல் தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியில் அறிமுகமாகினார்.

2021 முதல் 2024 ஆம் ஆண்டுவரை ஆர்சிபி அணிக்காக 26 போட்டிகளில் விளையாடி 41 விக்கெட்டுகளை ஹசரங்கா வீழ்த்தினார்.

இதில் 2022 சீசனில் மட்டும் ஹசரங்கா 26 விக்கெட்டுகளை கைப்பற்றினார். 2022 சீசனில் சன்ரைசர்ஸ் அணிக்கு எதிராக 18 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை ஹசரங்கா வீழ்த்தினார்.

2024 சீசன் முடிந்தபின் ஹசரங்காவை ஆர்சிபி கழற்றிவிட்ட நிலையில் அவரை ரூ.5.25 கோடிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணி வாங்கியது. பந்துவீச்சில் விக்கெட் எடுக்கும் திறமை கொண்ட ஹசரங்கா, தேவைப்படும் நேரத்தில் பேட்டிங்கும் சிறப்பாக ஆடக்கூடியவர்.



இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளரான மகீஷ் தீக்சனா கடந்த 2022 ஐபிஎல் ஏலத்தில் சிஎஸ்கே அணியால் வாங்கப்பட்டு தோனியால் பட்டைதீட்டப்பட்டார்.

2022 ஐபிஎல் தொடரில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி மிக இளம்வயதில் (21 வயது 255 நாட்கள்) 4 விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

2022 ஐபிஎல் ஏலத்தின்போது தீக்சனா இலங்கை ராணுவத்தில் பணியாற்றியிருந்ததால் அவருக்கு எதிராக சென்னை ரசிகர்கள் ஹேஸ்டேக் உருவாக்கி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிஎஸ்கே அணிக்காக 2022 முதல் 2024 வரை 32 போட்டிகளில் ஆடிய தீக்சனா 25 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். 2024 சீசனோடு சிஎஸ்கே அணியிலிருந்து கழற்றிவிடப்பட்ட தீக்சனாவை ரூ4.40 கோடிக்கு ராஜஸ்தான் அணி வாங்கியது.

### விலை சரிந்த நுவான் துஷாரா

இலங்கை வேகப்பந்துவீச்சாளர் நுவான் துஷாரா கடந்த 2024 ஆம் ஆண்டு சீசனில் மும்பை இந்தியன்ஸ் அணியால் ரூ.4.80 கோடிக்கு வாங்கப்பட்டார்.



7 போட்டிகளில் ஆடிய துஷாரா 8 விக்கெட்டுகளை மட்டுமே வீழ்த்தினார். 2024 சீசன் முடிந்தபின், மும்பை அணி துஷாராவை ரிலீஸ் செய்தது. அடிப்படை விலையாக துஷாரா ரூ.75 லட்சம் வைத்திருந்தநிலையில் அவரை ரூ.1.60 கோடிக்கு ஆர்சிபி அணி 2025 ஏலத்தில் வாங்கியது.

கடந்த 2024 ஏலத்தில் ரூ.4.80 கோடிக்கு வாங்கப்பட்ட துஷாரா, 2025 ஏலத்தில் ரூ.1.60 கோடிக்குத்தான் விலைபோனார்.

டெத் ஓவர்களில் சிறப்பாக யார்க்கர்களை வீசக்கூடியவர், விக்கெட் எடுக்கும் திறமை கொண்டவர், பந்துவீச்சில் பலவேரியேஷன்களை வெளிப்படுத்தி பேட்டர்களை திணறவிடுபவர் குறிப்பாக தட்டையான ஆடுகளமான பெங்களூருவுக்கு ஏற்றவர் என்பதால் ஆர்சிபி துஷாராவை வாங்கியது.

### சர்வதேச அறிமுகம் இல்லாத வீரர்

இலங்கை அணியிலேயே தேர்ந்தெடுக்கப்படாத வலதுகை வேகப்பந்துவீச்சாளர் இஷான் மலிங்காவை 2025 ஐபிஎல் ஏலத்தில் ரூ.1.20 கோடிக்கு வாங்கியது சன்ரைசர்ஸ் அணி.



ஆனால், 2025, ஜனவரியில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில்தான் இஷான் மலிங்கா அறிமுகமாகினார். உள்நாட்டளவிலும், லிஸ்ட்-ஏ பிரிவு போட்டிகளிலும் 50 போட்டிகளில்கூட இன்னும் மலிங்கா ஆடவில்லை.

ஆனால், இவரின் வேகப்பந்துவீச்சு மீது நம்பிக்கை வைத்து ரூ.1.20 கோடிக்கு சன்ரைசர்ஸ் வாங்கியுள்ளது.

இஷான் மலிங்கா உள்நாட்டு போட்டிகளில் பந்து வீசியபோது அவரின் எகானமி ரேட் 7.35 ஆகவும், ஸ்ட்ரைக் ரேட் 17.5 ஆக இருந்தது. மிகவும் நெருக்கடியான கட்டத்தில் விக்கெட்டுகளை வீழ்த்தும் திறமை கொண்டவர் என்பதால் மலிங்காவை சன்ரைசர்ஸ் வாங்கியது. கடந்த ஏப்ரல் 12ம் தேதி நடைபெற்ற பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதன் முறையாக களமிறக்கப்பட்ட இவர், இதுவரை 3 போட்டிகளில் விளையாடி 5 விக்கெட்டுகளை எடுத்துள்ளார்.



### டெல்லி அணியின் துருப்புச்சீட்டு

இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சு ஆல்ரவுண்டர், கீழ்வரிசையில் சுமாராக பேட் செய்யக்கூடிய வீரர் துஷ்மந்தா சமீரா.

2021ம் சீசனில் பாதியில் ஆர்சிபி அணியில் சமீரா சேர்க்கப்பட்டார். 2022ல் லக்னௌ சூப்பர் ஜெயின்ட்ஸ் அணியிலும், 2024சீசனில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிலும் சமீரா ஆடினார்.

ஆனால் 2022 சீசனில் லக்னௌ அணிக்காக 12 போட்டிகளில் ஆடிய சமீரா 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 2024 சீசனில் கொல்கத்தா அணி சமீராவை ரிலீஸ் செய்த நிலையில் அவரை ரூ.75 லட்சத்துக்கு டெல்லி கேபிடல்ஸ் அணி வாங்கியது.

இலங்கை அணியில் தரமான வேகப்பந்துவீச்சாளரான சமீரா ஒருநாள் போட்டி, டி20 போட்டிகளில் தலா 50 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தியுள்ளார். ப்ளே ஆப் சுற்றில் டெல்லி அணிக்கு துருப்புச்சீட்டாக சமீரா இருப்பார்.

### இரு கைகளிலும் பந்துவீசும் வீரர்

ஐபிஎல் தொடர் வரலாற்றிலேயே இரு கைகளிலும் பந்துவீசக்கூடிய முதல்வீரர் இலங்கையின் ஆல்ரவுண்டர் கமிந்த மெண்டிஸ்.

பேட்டிங்கிலும் பந்துவீச்சிலும் சிறப்பாக செயல்படக்கூடிய ஆல்ரவுண்டர் மெண்டிஸ். 2025 ஐபிஎல் ஏலத்தில்தான் சன்ரைசர்ஸ் அணி ரூ.75 லட்சத்துக்கு மெண்டிஸை வாங்கியுள்ளது.

இதுவரை 2 போட்டிகளில் மெண்டிஸ் விளையாடியுள்ளார். இலங்கை அணிக்காக டெஸ்ட், ஒருநாள், டி20 போட்டிகளில் சிறப்பாக ஆடிய இளம் வீரர் மெண்டிஸ், 60 சர்வதேச போட்டிகளுக்குள் 3 விதமான போட்டிகளிலும் 2 ஆயிரம் ரன்களுக்கு மேல் குவித்துள்ளார். ●

# இந்தியாவா, பாகிஸ்தானா?

ரஜ்னீஷ் குமார்



## வல்லரசு நாடுகளின் ஆதரவு யாருக்கு?



பனிப்போர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், இரண்டு முறை, அதாவது 1965 மற்றும் 1971-ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் இந்தியாவுடன் போரில் ஈடுபட்டது.

பனிப்போர் காலத்தில் அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகளின் கூட்டமைப்பில் பாகிஸ்தானும் ஓர் அங்கம் வகித்தது. அந்த காலத்தில்தான் சோவியத் யூனியன் 1979-ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானை தாக்கியது.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளை அதிகாரத்தில் இருந்து நீக்கி ஆப்கானிஸ்தானில் கம்யூனிச ஆட்சியை நிறுவ வேண்டும் என்று சோவியத் யூனியன் விரும்பியது.

மற்றொருபுறமோ, அமெரிக்கா கம்யூனிச ஆட்சிகளைக் கொண்ட நாடுகளை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனை முறியடிக்க, அமெரிக்கா பாகிஸ்தானின் உதவியை நாடியது. அதற்கு பதிலாக அமெரிக்காவிடம் இருந்து பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை பாகிஸ்தான் பெற்றது.

உத்தி ரீதியிலான தேவைகளுக்காகவே பாகிஸ்தானிடம் அமெரிக்கா நெருக்கம் காட்டியது. அந்த தேவைகள் முடிவற்றதாக இருக்கவில்லை.

அமெரிக்காவாலும் பாகிஸ்தானாலும் ஆப்கானிஸ்தானில் ஊக்குவிக்கப்பட்ட அடிப்படைவாதிகள் அந்த நாடுகளுக்கே சவாலாக மாறிறினர். அந்த சவால் இன்றும் நிலவுகிறது.

1962-ஆம் ஆண்டு இந்தியாவை சீனா தாக்கியது. மூன்று ஆண்டுகள் கழித்து பாகிஸ்தான் இந்தியாவை தாக்கியது. ஆனால் இந்தியாவைப் பற்றிய அதன் முன் அனுமானம் தவறாகிவிட்டது.

சீனாவுடனான போர் முடிந்த நிலையில், இந்தியாவின் மன உறுதி குலைந்திருக்கும் என்பதால் எளிதில் அதனை வெற்றிக் கொண்டுவிட முடியும் என்று பாகிஸ்தான் அப்போது நினைத்தது.

ஆனால் பாகிஸ்தான் அதன் நோக்கத்தில் வெற்றி அடையவில்லை. 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற போரின் போது பாகிஸ்தானுக்கு எந்த விதமான ராணுவ உதவியையும் அமெரிக்கா வழங்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்தியாவுக்கும் அந்த நாடு ஆதரவாக இல்லை.

ஆனால் 1971-ஆம் ஆண்டு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு உதவி புரிந்தது. வியட்நாமில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தன்னுடைய யூ.எஸ்.எஸ். எண்டர்ப்ரைசஸ் என்ற போர்க்கப்பலை அமெரிக்கா வங்கக் கடலுக்கு அனுப்பியது.

தேவை இருப்பின் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா உதவ முன்வரும் என்ற செய்தியை சோவியத் யூனியனுக்கு அறிவிக்கவே இதை செய்ததாக கூறப்படுகிறது.

அமெரிக்கா அந்த போரில் நேரடியாக எந்த தலையீடும் செய்யவில்லை என்ற போதும், ராஜ்ஜீய ரீதியாகவும் மன அளவிலும் பாகிஸ்தானுடன் துணை நின்றது அமெரிக்கா.

1971-ஆம் ஆண்டு அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி சோவியத் யூனியனுடன், அமைதி, நட்பு மற்றும் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அந்த ஒப்பந்தத்தின்படி, போர் சூழல் ஏற்படும் போது இந்தியாவுக்கு தேவையான ராஜ்ஜீய மற்றும் ஆயுத ரீதியிலான உதவிகளை வழங்க வாக்குறுதி கொடுத்தது சோவியத் யூனியன்.

கிழக்கு பாகிஸ்தானில் நிலவிய நெருக்கடியால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் 1971-ஆம் ஆண்டு 13 நாள் போர் நிலவியது. இதற்குப் பின்பே கிழக்கு பாகிஸ்தான் வங்கதேசமாக உருப்பெற்றது. அன்றைய பாகிஸ்தானை இரண்டு நாடுகளாக பிரிப்பதில் வெற்றி கண்டது இந்தியா.

மேற்கத்திய நாடுகளின் கூட்டணியில் பாகிஸ்தான் இடம் பெற்றிருந்த போதும், பாகிஸ்தான் போரில் தோல்வி அடைந்தது. பாகிஸ்தானுக்கு மேற்கத்திய நாடுகளின் உதவி மட்டுமின்றி வளைகுடாவில் உள்ள இஸ்லாமிய நாடுகளின் ஆதரவும் இருந்தது.

பனிப்போர் முடிவடைந்து கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் நிறைவடைந்திருந்த நிலையில், பாகிஸ்தான் கார்கிலை தாக்கியது. பிறகு, அந்த தாக்குதலில் இருந்து பின்வாங்கியது பாகிஸ்தான்.

இந்த மூன்று போர்களுக்குப் பிறகு உலகம் முழுமையாக மாறிவிட்டது. சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்து தற்போது ரஷ்யாவே எஞ்சியிருக்கிறது.

இரு துருவங்களாக இருந்த உலகம் தற்போது ஒற்றை துருவமாக மாறிவிட்டது. ஆனால் இரண்டாம் துருவமாக திகழ்கிறோம் என்று சீனா வலிமையான கோரல்களை முன்வைக்கிறது.

மற்றொருபுறம், இந்தியா உலகின் நான்காவது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக மாறிவிட்டது. மாறிவரும் உலகில் தனக்கான இடத்தை இந்தியா தக்கவைத்துள்ளது. ஆனால் பொருளாதாரத்திற்காக பாகிஸ்தான் சவூதி அரேபியா, சீனா மற்றும் பல உலக நிறுவனங்களை நம்பியுள்ளது.

ஆப்கானிஸ்தானை இனி யார் ஆள வேண்டும் என்பது குறித்து அமெரிக்கா தற்போது கவலை கொள்வதில்லை என்பதால் முன்பு போல் பாகிஸ்தானின் உதவியும் இனி அதற்கு தேவையில்லை.

இரு நாடுகளுக்கும் இடையேயான ஆழமான, பரஸ்பர உறவு என்பது அவ்விரு நாடுகளும் பரஸ்பர நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு பங்கு வகிக்கிறது என்பதைச் சார்ந்தே இருக்கிறது.

உலகின் மிகப்பெரிய இரண்டு பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனாவுடனான இந்தியாவின் இரு நாட்டு வர்த்தக மதிப்பானது 100 பில்லியன் டாலர்களைவிட அதிகம்.

வளைகுடாவில் அமைந்துள்ள முக்கிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இந்தியாவின் வர்த்தகம் 100 பில்லியன் டாலர்கள் மதிப்பைக் கடந்துள்ளது. சவூதி அரேபியாவுடனான ஆண்டு வர்த்தக மதிப்பானது 50 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது.

2022-ஆம் ஆண்டு உக்ரேன் மீது ரஷ்யா முழு வீச்சில் போர் தொடங்கிய பின், ரஷ்யாவுடனான இந்தியாவின் வர்த்தக மதிப்பு 65 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.

இந்தியாவுடன் பெரிய அளவில் வர்த்தக உறவில் ஈடுபட்டுள்ள நாடுகளில், முதல் 3 இடத்தில் உள்ள நாடுகளும் சவூதி அரேபியாவும் பாகிஸ்தானுடன் நட்பு பாராட்டி வருகின்றன அல்லது கடந்த காலத்தில் நட்புறவில் இருந்துள்ளன.

ஆனாலும் அந்த நாடுகளுடனான பாகிஸ்தானின் இரு நாட்டு வர்த்தக மதிப்பானது குறைவாகவே உள்ளது.

இந்தியா போன்ற பெரிய சந்தையை புறக்கணித்து பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்க எந்த நாடும் விரும்பாது.

ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட போது சவூதி அரேபியா அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அந்த நாட்டின் வர்த்தக நலன்கள் இந்தியாவுடன் தொடர்புடையது என்று அப்போது பாகிஸ்தான் நிபுணர்கள் தெரிவித்தனர்.

இந்துத்துவா பிம்பத்தைக் கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான் சகோதரர் என்று அழைத்தார்.

பனிப்போருக்கு பிறகான உலகில் இந்தியாவின் முக்கியத்துவம் அதிகரித்தது. ஆனால் பாகிஸ்தானால் அதன் பழைய முக்கியத்துவத்தைக் கூட தக்க வைக்க இயலவில்லை.

இந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் அதிபராக ட்ரம்ப் இரண்டாம் முறையாக ஆட்சி அமைத்த பிறகு, பரிவர்த்தனை சார்ந்த உறவுகள் முக்கியத்துவம் பெற துவங்கின.

பனிப்போர் காலத்தில் யார் யாருடன் இருந்தார்கள், யார் யாருக்கு எதிராக இருந்தார்கள் என்பதைக் காட்டிலும், தற்போதைய சூழலில் அமெரிக்காவிடம் இருந்து யார் அதிகம் வாங்குகிறார்கள், அமெரிக்காவுக்கு அதிகம் யார் விற்பனை செய்கிறார்கள் என்பதே முக்கியமாக உள்ளது.

ட்ரம்பும் கூட ரஷ்யாவுடன் நல்ல உறவை மேம்படுத்த விரும்புகிறார். ஆனால் பாகிஸ்தானின் பலவீனமான பொருளாதாரம் காரணமாக எந்த ஒரு பொருளையும் வாங்குவதற்கான அல்லது விற்பதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.

இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத நாடுகள். தற்போது அதிகரித்து வருகின்ற பதற்றமான சூழலில், சர்வதேச அளவில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே சமரச பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் மூலமாக யார் யாருக்கு ஆதரவாக இருக்கிறார்கள், யார் நடுநிலைத் தன்மையோடு இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள இயலும்.

மே 8 இரவு, துருக்கி அதிபர் எர்துவான் எக்ஸ் தளத்தில் எழுதிய பதிவொன்றில், 'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே வளர்ந்து வரும் பதற்றத்தைக் கண்டு வருத்தம் அடைந்துள்ளோம். ஏவுகணை தாக்குதல்களால் பொதுமக்கள் பலர் தங்களின் உயிரை இழந்துள்ளனர். பாகிஸ்தானும் அதன் மக்களும் எங்களின் சகோதரர்களைப் போன்றவர்கள். அவர்களுக்காக நாங்கள் அல்லாவை பிரார்த்திக்கிறோம்," என்று கூறியிருந்தார்.

'பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷரீஃபுடன் நான் தொலைபேசி வாயிலாக உரையாடினேன். ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற மோசமான தீவிரவாதத் தாக்குதலை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று நான் நம்புகிறேன். சிலர் இந்த விவகாரத்தை மேலும் பெரிதாக்க விரும்புகின்றனர். ஆனால் பதற்றத்தைக் குறைத்து பேச்சுவார்த்தையை தொடங்கி வைக்க துருக்கி விரும்புகிறது. நிலைமை மோசமடைவதற்கு முன்பு இரு நாடுகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்," என்று எர்துவான் கூறுகிறார்.

பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை எர்துவானின் கருத்து உறுதிப்படுத்துகிறது.

பஹல்காம் தாக்குதலுக்கு பாகிஸ்தானும் சர்வதேச விசாரணையை கோருகிறது. அதுமட்டுமின்றி, பாகிஸ்தானில் கொல்லப்பட்டவர்களுக்காக எர்துவான் அஞ்சலி செலுத்தினார். மேலும் அவர்களை தன்னுடைய சகோதரர்கள் என்றும் அவர் கூறினார்.

எர்துவான் துருக்கியின் அதிபராக பொறுப்பேற்ற பிறகு, பாகிஸ்தானுடனான ராணுவ உறவு அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் இந்தியாவுடனான இடைவெளி நீடிக்கிறது.

சன்னி இஸ்லாமியர்கள் பெரும்பான்மை நாடுகளான துருக்கியும் பாகிஸ்தானும் இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமையை வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும் இந்தியாவுடனான துருக்கியின் இரு நாட்டு வர்த்தகம் ஆண்டுக்கு 10 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது. பாகிஸ்தானுடனான வர்த்தகம் ஒரு பில்லியன் டாலர்களையே தாண்டியுள்ளது.

ஆனால் மற்றொரு புறம் சவூதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அதெல் அல் ஜுபைர் வியாழக்கிழமை இந்தியா வந்தார். முன்னறிவிப்பு ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்ட பயணம் இதுவாகும்.

இந்தியா வந்த அவர், பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை நேரில் சந்தித்துப் பேசினார்.

(14ம் பக்கம் பார்க்க)




# வியுக்தியார் பதில்கள்

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் கலந்துரையாடி வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளதுடன், தமிழ் தேசியப்பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருடன் மேற்படி விடயம் தொடர்பாக பேசுவதாகவும் கூறியிருக்கிறாரே. அவர்களோ ஐந்து கட்சிக் கூட்டணி அல்லவா? அது எப்படி இந்த மூன்று தலைவர்களுடன் மட்டும் பேசுவது?

**வியுக்தியார்:** கஜேந்திரகுமார் தனித்தனியாக சந்தித்தாரா? அல்லது மூன்று தலைவர்களையும் ஒன்றாகச் சந்தித்திருந்தாரா என்பது தெரியவில்லை. அப்படி அவர் தனித்தனியாகச் சந்தித்திருந்தால், அதுபற்றி கருத்துக் கூறுவது சரியாக இருக்காது. ஏனெனில் அவர் மற்றைய தலைவர்களையும் சந்திக்க இருக்கிறாரா அல்லது சந்திக்க மாட்டாரா என்பது தெரியாதவரை அதுபற்றி விமர்சிப்பது சரியானது அல்ல. ஆனால் அவர் இந்த மூன்று தலைவர்களையும் ஒன்றாகவே சந்தித்திருந்தால், அது அந்த மூன்று தலைவர்களின் தவறு. அவர்கள்தான் தமது கூட்டணியில் உள்ள கட்சிகளின் தலைவர்களையும் அழைத்துச் சென்றிருக்கவேண்டும். அல்லது அவர்கள் இல்லாமல் தாங்கள் சந்திக்க மாட்டோம் என்று தெரிவித்திருக்கவேண்டும். அதுவல்ல, இந்த வியுக்தியாரை உறுத்துவது: தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தி 'எழுக தமிழ்' நடாத்தியபோது அந்த அமைப்பில் கஜேந்திரகுமார் உடன் சித்தார்த்தனும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் இணைந்திருந்தார்கள். ஆனால் அந்த அமைப்பு செயலற்றுப்போன பின்னர் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் சுரேஷ் பிரேமச்சந்திரனுடன் கூட்டுச்சேர முடியாது என்றதோடு மாத்திரமல்ல, அவர் இந்தியாவின் அடிவருடி என்றும் வசைபாடியவர் கஜேந்திரகுமார். இப்போது எப்படி அவருடன் கூட்டுச் சேர பேச்சு நடாத்துகிறார் என்பதுதான் தெரியவில்லை.

---

**சு. தில்லைநாதன்**
**கொழும்புத்துறை.**

**கேள்வி:** யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் பாராளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாக செயல்படக்கூடியவராக இருக்க வேண்டும், என்று யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் முதல்வரை நிச்சயம் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் இராஜதந்திர ரீதியாக உரையாட வேண்டும். யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ் மக்களின் அபிலாசைகள், அவர்களின் பிரச்னைகள் என்பவற்றை எடுத்துக் கூறக் கூடியவராகவும் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். சரியான - அவசியம் கவனிக்கப்படவேண்டிய கருத்துத்தானே?

**வியுக்தியார்:** இந்தச் செய்தியைப் படித்த உடன், எனக்கு ஒரு நண்பர்தான் ஞாபகத்திற்கு வந்தார். அவர் தலையிலை முடியே இருக்காது. வழுக்கைத் தலையர். அவர் நண்பர்களோடு கதைத்துக்கொண்டிருக்கும்போது அடிக்கடி, தன்னுடைய தலையைத் தடவிக்கொண்டே சொல்லுவார். "தலையிலை மயிர் இல்லாத ஆக்களுக்கு மூளை கொஞ்சம் அதிகம் ஐசே..." என்று. தமிழ் அரசு கட்சி தனிப்பெரும் கட்சியாக இரண்டாயிரத்தி பதினெட்டாம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில வெற்றி பெற்றபோதிலும் அவர்களின் கட்சியில் மேயராக நியமிக்கப்பட்டவர், அவர்களின் கட்சி உள்வீட்டு குத்து வெட்டுக்களாலேயே பதவியை இழந்துவிட, அதே குத்துவெட்டுக்களை பயன்படுத்தி, டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று மேயராக வந்த மணிவண்ணன், தான் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைவிட சிறப்பானவர் என்கிறார் என்பது நமக்கு தெரிந்ததுதான். அவர் நம்மட ஊசி வைத்தியரைவிட சிறப்பாக பணியாற்றக்கூடியவர் என்று சொல்கிறாரோ தெரியவில்லை. நல்லவேளை, இந்த ராஜதந்திரிகளோடு கதைக்கவேண்டும் என்பதற்காக மேயராக வருபவருக்கு ஆங்கிலமும் தெரிந்திருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. முதல் ஒருமுறை மாவை ஐயா வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வர விரும்பிய போது. நமது சம்பந்தன் ஐயா சொன்னமாதிரி, "மாகாண முதல்வர் எண்டால் ஆங்கிலமும் எல்லோ தெரிந்திருக்கவேண்டும்" என்று. இப்படி மணிவண்ணன் சொல்லுவாரா என்பது தெரியவில்லை.

---

**இரா. ஜெயச்சந்திரன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும்போது யார் முதல்வர் என்பது போன்ற விடயங்களை முன்நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது என்றும், இம்முயற்சி கைகூடும்வரை சுமந்திரனை ஒதுக்கி வைத்தாலே எல்லாம் சுபமாக முடியும் என்றும் மூத்த போராளி பசீர் காக்கா என்ற மனோகர் தெரிவித்துள்ளாரே. சுமந்திரன் கட்சிக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ்த் தேசிய உணர்வாளர்களை நோகடிக்கும் விதத்திலேயே செயல்பட்டு வந்துள்ளார் என்றும், 2018ல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது தேர்தல் முடிந்த பின்னரே மேயர் தொடர்பாக முடிவெடுப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முடிவெடுத்திருந்தபோதிலும் அவர் தன்னிச்சையாக சில அறிவிப்புக்களைச் செய்ததையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவரது கருத்து நியாயமானதாகத்தானே இருக்கின்றது.

**வியுக்தியார்:** சுமந்திரன் குறித்து இந்த வியுக்தியாரின் பார்வை எத்தகையது என்பது, இந்தக் கேள்வி பதில் பகுதியை தொடர்ந்து படித்துவரும் வாசகர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். ஆனால், நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல் ஒரு தெளிவான செய்தியைச் சொல்லியிருக்கின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் அரசு பெரும் 'அடியை' வாங்கியது, சுமந்திரன் என்ற தனி மனிதரால்தான் என்று வியுக்தியார் நம்புவது சரியா என்பது வேறு விடயம். ஆனால் தமிழ் அரசு கட்சியில் நடந்த 'உள்குத்துவெட்டுக்களை' சகிக்க முடியாததால்தான் அந்தத் தேர்தலில் அண்ணளவாக நாற்பதாயிரம் தமிழ் தேசிய உணர்வாளர்கள் வாக்களிக்காமலே தவிர்த்தார்கள். (கடந்த மூன்று- நான்கு தேர்தல் முடிவுகளை அவதானித்தால் இது புரியும்) ஆனால் தாம் அவ்வாறு செய்தது, ஒரு தென்னிலங்கைக் கட்சிக்கு சாதகமாகிவிட்டது என்பதை புரிந்துகொண்டதால்தான், அவர்கள், தமது உள்வீட்டுப் பிரச்னைகளை கருத்தில் கொள்ளாமல் இந்தத் தேர்தலில் தமிழ் அரசுக்கு வாக்களித்தார்கள். யார் என்ன சொன்னாலும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்பது இப்போது தமிழ் அரசுதான் என்பது நிரூபணமாகியிருக்கிறது. அதேவேளை, அந்தக் கட்சியின் உள்வீட்டுப்பிரச்னைகளைப் பொறுத்தவரை, சுமந்திரனை ஓரம்கட்டிக்கொண்டு யாரும் கட்சியில் மேலே வரமுடியாது என்பதையும் சுமந்திரன் நிரூபித்திருக்கிறார். இதனால் இனி அவரும் தவிர்க்கப்படமுடியாதவரே. அவரைவிட ஆளுமையுள்ள ஒருவர் கட்சியில் மேலெழும்வரை அவரையும் இணைத்துக்கொண்டுதான் தமிழர் அரசியல் இனி நகரும். இதனை மூத்த போராளியான காக்காவும் எதிர்காலத்தில் உணர்ந்து கொள்வார் என்றே நினைக்கின்றேன்.

---

**இ. கந்தசாமி**
**வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** ஜே.வி.பியின் பசப்பு வார்த்தைகளை நம்பி ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் அவர்களுக்கு வாக்களித்தமை தவறு என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். இந்த வெற்றி எங்களை நாங்களே ஆள்வதற்காக மக்கள் எமக்கு தந்த ஆணையாக பார்க்கின்றேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகர சபை முதன்மை வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளாரே. உள்ளூராட்சி சபைகளை ஆட்சி செய்வதன் மூலம் எங்களை நாங்களே ஆட்சி செய்யலாம் என்றால், பிறகு எதற்கு சுயநிர்ணயம் - தன்னாட்சி- ஒரு நாடு இருதேசம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்?

**வியுக்தியார்:** சிவாஜிலிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். பின்னர் மாகாணசபை உறுப்பினராக இருந்தவர். இப்போது நகரசபை உறுப்பினராகி இருக்கிறார். வழக்கமாக அரசியலுக்கு வருபவர்கள், உள்ளூராட்சி சபைகளில் தான் அரசியலைத் தொடங்குவதுண்டு. பின்னரே படிப்படியாக வளர்ந்து எம்.பி. ஆகுவார்கள். ஆனால் நமது சிவாஜி அண்ணரோ மேலே இருந்து கீழே இறங்கிக்கொண்டிருக்கிறார். அதனால் அவருக்கு இப்போதுதான் இந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் நம்மை நாமே ஆட்சி செய்யலாம் என்பது தெரிந்திருக்கின்றதோ தெரியவில்லை. அதுவல்ல நமக்கு உறுத்துவது: ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது மாகாணசபைகளுக்கு தேர்தல்களை நடத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்த வேளையில் எல்லாம், அவர் பஞ்சாயத்து முறைதான் நாட்டுக்கு நல்லது என்று சொல்லிக்கொண்டிருந்தார். அவர் மட்டுமல்ல, கோட்டாபாய ராஜபக்ஷவும் கூட அந்தக் கருத்தை சொன்னதாக ஞாபகம். சிவாஜி அண்ணையும் அவர்கள் வழிக்கு வந்துவிட்டாரோ தெரியவில்லையே. அவர் வராவிட்டாலும் கூட, அவர் ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டபோது, ராஜபக்ஷக்களுக்கு உதவுவதற்காகத்தான் போட்டியிடுகிறார் என்று சிலர் சொன்னதுபோல இப்போதும் சொல்வார்களோ தெரியவில்லை.

---

**எம். ரமணன்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** வலுவான, நேர்மையான பொது சேவையை வழங்க அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுப் பணியில் ஈடுபட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளதுடன், உண்மையுள்ள நிர்வாகத்திற்கான பொதுமக்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக இந்த முயற்சியை வழிநடத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்கிறாரே. தேர்தலுக்கு முன்னரே எதிர்க்கட்சிகளை எல்லாம் ஒன்றிணைக்கும் முயற்சியை சிலர் முன்னெடுத்தபோது அதனை நிராகரித்தவர், இப்போது ஒற்றுமைக்கு அழைப்பு விடுப்பது சரியா?

**வியுக்தியார்:** எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட- ஆகக்குறைந்தது கொழும்பு மாநகர சபை போன்ற முக்கிய சபைகளிலாவது இணைந்து போட்டியிடவேண்டும் என்று சிலர் முயன்றபோது அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது அவர் அதற்கு உடன்படுவது எதிரணியின் தலைமை தன்னிடமே இருக்கின்றது என்பது உறுதியான பின்னர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அவரது கட்சியே எதிரணியில் அதிகூடிய இடங்களைப் பெற்றிருக்கின்றது. அதைவிட இந்த உள்ளூராட்சி தேர்தல் முறையே தனித்தனியாக கேட்டுவிட்டு பின்னர் இணைவதுதான் சரியானது என்பதும் நாம் கவனிக்க வேண்டியது. ஆனால் தமிழ் அரசு உள்ளூராட்சி தேர்தலில் கூட்டமைப்பாக போட்டியிடாது தனித்து போட்டியிட 2022ல் முடிவெடுத்தது சரியானது என்றும் சுமந்திரனின் முடிவுதான் சரியானது என்றும் சிலர் இப்போது 'கொக்கரிக்கிறார்கள்'. உள்ளூராட்சி தேர்தலில் கூட்டமைப்பாக இல்லாமல் தனித்தனி கட்சியாக கேட்பது நல்லதுதான். ஆனால் அந்த முடிவை மூன்று கட்சிகளும் கூட்டாக எடுக்காததுதான் தவறு. அதனால்தான் பங்காளிக்கட்சிகள் வெளியேற வேண்டிய நிலை வந்தது. ஆக, அந்த முடிவை கூட்டாக எடுத்திருந்தால், பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு கூட்டமைப்பாகவே போட்டியிட்டிருக்கும் இப்படி பெரிய அடியை வாங்கியிருக்க வேண்டியும் வந்திருக்காது. தேசிய மக்கள் சக்தியும் முதலாவது பெரிய கட்சியாக வந்திருக்காது. ஆக, தனித்து போட்டியிடுவது என்ற முடிவை தமிழ் அரசு தனித்து எடுத்தது (அந்த முடிவை கட்சியில் யார் எடுத்தார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதான்) தமிழ் இனத்திற்கு இழப்பையே தந்தது. ஆனால் பிரேமதாசா எடுத்த முடிவு சரியானதுதான்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட ரெலோ தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார். புளொட், அகில இலங்கைதமிழ் காங்கிரஸ் உள்பட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட்ட கட்சிகளை மீண்டும் செயல்பட வருமாறு கோரிக்கை விடுக்கிறோம் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளாரே. அதோட அவர் நிறுத்தியிருக்கலாம், தங்கட கட்சி தனிமனித முடிவு எடுக்கிற கட்சி இல்லை என்றும் சொல்லியிருக்கிறாரே.

**வியுக்தியார்:** அவர் சொன்னதில் என்ன தவறு இருக்கின்றது?. எந்த ஒரு அரசியல் கட்சியிலும், அதிகம் ஏன் எந்த ஓர் அமைப்பிலும் அதுக்கு நிர்வாக கட்டமைப்பு இருந்தாலும் அதில் இருக்கிற ஒருவர்தான் முடிவெடுப்பார். அவர் எடுக்கிற முடிவு சரியாகத்ததான் இருக்கும் எனல்ற நம்பிக்கையில் அதன் நிர்வாக சபையிலோ மத்திய குழுவிலோ இருக்கின்றவர்கள் எல்லோரும் அதை ஏற்றுக்கொள்வார்கள். அதாவது நிர்வாக குழு தான் முடிவெடுத்தாலும் அந்த முடிவு ஒருவர் எடுத்ததாகத்தான் இருக்கும். யாருக்காவது அதில் சந்தேகமோ அல்லது முரண்பாடோ இருந்தாலும், அதை தலைவர் தனது முடிவு பற்றி விளக்கமாக சொல்லி அவரையும் இணங்கவைப்பார். கட்சிக்கு, தான் பதில் தலைவராக இருந்தாலும், தான் அப்படி முடிவெடுக்கிறதில்லை என்பதையும், தான் எடுத்தாலும் மத்திய குழு ஏற்றுக்கொள்ளாது என்பதையும் மனுசன் ஏற்றுக்கொண்டிருக்கிறார் அவ்வளவுதான்.

# உக்ரைன் - காஸா - காஷ்மீர்: முடிவில்லாத போரும் முறிவடையும் யுத்த நிறுத்தங்களும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்கா அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு முதல் 24 மணி நேரத்துக்குள் உக்ரைன் போரை நிறுத்தி விடுவேன் என்ற பேச்சு தற்போது வெறும் வாய்ச் சவாடலாகவே மாறியுள்ளது.

தற்போது ட்ரம்ப் அதிபராக பதவியேற்று நான்கு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. உக்ரைனிய போர் இந்த அளவுக்கு கடுமையான மற்றும் சிக்கலான மோதலாக இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை ட்ரம்ப் தற்போது உணரத் தொடங்கியிருக்கலாம்.

இதேவேளை ரஷ்ய அதிபர் உடனடி யான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அவச ரப்பட விரும்பவில்லை. நீண்ட கால தீர் வைப் பற்றி பேசுவதற்கு முன்பு இடைக் கால போர் நிறுத்தத்தை கோரும் அமெ ரிக்காவின்



இரண்டு கட்ட திட்டத்தை தான் உறுதியாக எதிர்ப்பதாக புட்டின் வெளிப்படுத்தி இருந்தார்.

அண்மையில் குறுகியகால மூன்று நாள் போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்தது. ஆனால் எந்தவொரு சமரச பேச்சுவார்த் தையும், போரின் மூலக் காரணங்கள் என்று கருதும் விஷயங்கள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் புட்டின் மிக உறுதி யாக உள்ளார்.

நேட்டோ விரிவாக்கம் மற்றும் உக்ரைன் மேற்குலகு சார்பு கொண்ட நாடாக இருப் பது ஆகியவை ஒரு வகையில் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துவதாக ரஷ்ய அதிபர் வெளிப்பட கூறியுள்ளார்.

எந்தவொரு சமாதான உடன்பாடும் ஒப்புக் கொள்ளப் படுவதற்கு முன்பு, ரஷ்யா முன்வைக்கும் முக்கியமான கேள்விகளுக்கும் நிபந்தனைகளுக்கும் பதிலளிக்க வேண்டுமென்றும் புட்டின் வலியுறுத்தி வருகிறார்.

**ட்ரம்ப் ஜெலன்ஸ்கி கனிமவள ஒப்பந்தம்:**

உடனடியாக போரை நிறுத்த கோரும் அமெரிக்கா, போர் நிறுத்தத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகளில் தான், ட்ரம்ப் அரசு அதிகமாக கவனம் செலுத்துகிறது. யுத்த நிறுத்தம் மூலம் அமெரிக்க நிறுவனங்களுக்கு உக்ரைனின் முக்கியமான கனிம வளங்களை பெற வாய்ப்பு அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

பல மாதங்கள் நீடித்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, உக்ரைனின் கனிம மற்றும் எரிசக்தி இருப்புக்களை விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் கிடைக்கும் லாபத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான ஒப்பந்தத்தில் உக்ரைனும் அமெரிக்காவும் இணைந்து செயல்பட அண்மையில் கையொப்பம் இட்டுள்ளன.

உக்ரைனின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பில் அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்வதற்கான பொருளாதார ஊக்கத்தை வழங்கும் எனக் கூறி இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

உக்ரைனுக்கு ஏற்கனவே தங்கள் நாடு செய் துள்ள உதவியின் அளவு தொடர்பான அமெரிக்காவின் பொருளாதார நலன்களை நிவர்த்தி செய்வ தையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் கிராஃபைட், டைட்டானியம், லித்தியம் என பல்வேறு முக்கியமான கனிமங்கள் பெருமளவில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்தக் கனிமங்கள், புதுப்பிக்கத்தக்க எரி சக்தி, ராணுவ தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு உள்பட பல முக்கியமான துறைகளுக்கு பயன்படும் என்ப தால் இந்த கனிமங்க ளுக்கு சர்வதேச அளவில் தேவை அதிக அளவில் உள் ளது.

போரினால் சிதைந்திருக்கும் உக்ரை னின் பொருளாதாரத்தை உத்வேகத்துடன் மேம்படுத்துவதற்காக முதலீட்டு நிதியை உருவாக்குவது தொடர்பாகவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும் அமெரிக்கா மற்றும் உக்ரைன் இடையிலான இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்யா இதுவரை பதிலளிக்கவில்லை.

இவ்வருட ஜனவரி 16இல் காஸாவில் போர் நிறுத்தம் குறித்து இஸ்ரேல்- ஹமாஸ் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் காஸாவில் கடந்த 15 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போரானது முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் 7இல் தொடங்கிய காஸா போரில் இதுவரை 50,000 க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என அமெரிக்கா, எகிப்து, கட்டார் ஆகிய நாடுகள் நீண்டகாலமாக முயற்சித்து வந்தன. இந்நிலையில் காஸா போர் நிறுத்தம் மற்றும் பிணைய கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் - ஹமாஸ் ஜனவரியில் ஒப்புதல் அளித்தன.

அவ்வேளையில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப், இரண்டு வாரங்களுக்குள் பிணைய கைதிகளை விடுவிக்க வில்லை என்றால், ஹமாஸ் அமைப்பினர் மோசமான விளைவு களை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை கொடுத்து இருந்தார். இந்த நிலையில் தான் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

முதற்கட்ட போர் நிறுத்த நடவடிக்கையாக, காஸாவில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறும் என்றும், ஹமாஸ் படைகள் பிடியில் எஞ்சியுள்ள பிணைய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன் பிறகு இஸ்ரேலின் பிடியில் சிக்கியுள்ள பாலஸ்தீன மக்களும், நிலங்களும் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு தரும் மற்ற நாடுகள் மீதும் தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வந்தது. லெபனான் நாட்டில் ஹிஸ்புல் லாக்கள் மீதும் மற்றும் ஏமன் நாட்டின் ஹவுத்திகள் மீதும் தாக்குதலை இஸ் ரேல் தொடர்ந்து நடாத்தியது.

மார்ச் மாத இறுதியில் இருதரப்பும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்கு தல்களை தீவிரப்படுத்தின.

சுமார் 15 மாத காலமாக நீடித்த இந்த போர்



முடிவுக்கு வரும் என எதிர்பார்க் கப்பட்டது போல நடக்கவில்லை. காஸா வில் தொடர்ந்து தீவிரமான போர் நடைபெற்று வருகிறது.

காஷ்மீர் விவகாரத்திற்காக இந்தியா, பாகிஸ்தான் இடையே மோதல் அதிக ரித்து வருவதுடன், பதற்றம் தணிய அமை தியை ஏற்படுத்த உலக நாடுகள் வலியுறுத்து வருகின்றன. இந்நிலையில் அமெரிக்க அரசும் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய் து வருகிறது.

பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதலுக்கு இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்" என்று பெயரிட்டுள்ளது. இரு தரப்பிலும் பதற்றமான சூழல் நிலவி வருகின்ற நிலையில், உலகத் தலைவர்கள் இரு நாடுகளும் அமைதிக்கான தீர்வுகளை நோக்கி நகர வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்நிலையில் அமெரிக்க அதிபர், இந்தியா - பாகிஸ்தான் விவகாரம் தொடர்பாக இரு நாட்டு தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். நீண்ட கால அமைதி மற்றும் பிராந்திய நிலைத்தன் மையை நிலைநாட்டுவதற்கான தீர்வை நோக்கி இரு நாடு களும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம் என்று அமெரிக்க செய்தித் தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் தாக்குதல்களுக்குப் பிறகு கட்டுப்பாட்டைக் கடைபிடிக்க பாகிஸ்தானை வலியுறுத்தும் வகையிலான கோரிக்கையை அமெரிக்கா முன்வைத்துள்ளது. ஆனாலும் இந்தியா அமெரிக்க இடையிலான உறவுகள் சமீப ஆண்டுகளில் வலுவடைந்து உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் சர்வதேச அளவில் தனிமைப்ப டுத்தப்பட்டு இருப்பதும் தெளி வாகிறது. அமெரிக்க இதுவரை பாகிஸ்தான் அரசுக்கே உதவி செய்து வந்தது. தற்போது இந்த மாற்றம் வரலாற்றில் ஒரு போதும் இல்லாத அளவுக்கு இந்திய அரசுக்கு பெரும் பலத்தை கொடுத் துள்ளது.

இந்த மோதல் விரைவாக முடிவுக்கு வந்து, அமைதியான தீர்வுக்கான பணிகள் மேற்கொள் ளப்படும் என்று ரஷ்யாவும் தெரி வித்துள்ளது. ஆனால் காஷ்மீர் விவகாரத்தில் எந்த ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையில் போர் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.



# கூட்டுறவுத்துறையால் மாத்திரமே அரிசி மாபியாவை கட்டுப்படுத்தலாம்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 11

"அரிசி மாபியாவை கூட்டுறவுத்துறையால் மாத்திரமே கட்டுப்படுத்துவதற்கு முடியும். தனியார்த் துறையினர் இலாபத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயல்படுவர். ஆனால், கூட்டுறவுத்துறை சேவையை அடிப்படையாகக் கொண்டு சிறியதொரு இலாபத்துடன் மாத்திரமே செயல்படும். அதனாலேயே, கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துவதன் ஊடாக அரிசி மாபியாவை எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்"- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

இளம் ஆய்வாளர்கள் வலையமைப்பு நடத்திய இளம் கூட்டுறவாளர் மாநாடு தந்தை செல்வா அரங்கில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளுநர் தனது உரையில், 1970 - 1980 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் முன்னுதாரணமாகச் சொல்லப்படக் கூடிய வகையில் வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறை செயல்பட்டது. இங்குள்ள எமது விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து கொழும்புக்கு கொண்டு சென்று விற்பார்கள். திரும்பி வரும்போது எமது மக்களின் நுகர்வுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டு வந்து, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விற்பனை செய்வார்கள். அன்றைய காலத்தில் தனியார்த் துறையினர் நலிவடைந்திருந்தனர். காலப்போக்கில் போர் காரணமாக கூட்டுறவுத்துறை நலிவடையத் தொடங்கியது. ஒரு காலத்தில் அரசாங்கத்தின் நிவாரணங்களை வழங்கும் மையமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கத் தொடங்கின. தற்போது தனியார்த்துறையினர் பலமடைந்துள்ள நிலையில் அவர்களுடன் போட்டிபோட முடியாத நிலைமைக்கு எமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவீனமடைந்துள்ளன. பல சங்கங்கள் தங்களிடமுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களின் இலாபம் ஊடாகவே பணியாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குகின்றார்கள்.

எங்களது கூட்டுறவு பலவீனமடைவதற்கு போர் காரணமாக இருந்தாலும் போரின் பின்னரும் அவர்களால் முன்னைய நிலைமைக்கு வரமுடியவில்லை. இதில் விதிவிலக்காக பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவர்கள் இப்போதும் சிறப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தலைமைத்துவத்தில்தான் ஒவ்வொன்றினதும் வெற்றி தோல்வி தங்கியிருக்கின்றது. தூரநோக்குடன், துணிந்து செயல்பட வேண்டும். அதேபோல புத்தாக்க சிந்தனையுடன் இயங்க வேண்டும். ஆனால், அத்தகைய தலைமைத்துவங்கள் கூட்டுறவுக்கு கிடைக்காமையால் அவை சரிவைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன.

நான் மாவட்டச் செயலராகப் பணியாற்றிய காலங்களில் கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்துவதற்காக அவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக பல்வேறு உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்திருக்கின்றேன். அரிசி ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்முயற்சிக்கான வளங்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். ஆனால், அவர்கள் அதனைப் பயன்படுத்தி தங்களை முன்னேற்றவில்லை. மாறாக தவறான முகாமைத்துவம் காரணமாக அவை மூடப்படவேண்டிய நிலைமைக்குத்தான் வந்திருக்கின்றன. அந்த உபகரணங்களை பூட்டி வைத்திருந்தார்கள். தலைமைத்துவங்கள் சரியாக அமையாததால் இந்த நிலைமை ஏற்பட்டது.

கடந்த காலங்களில் அரசாங்கம் கர்ப்பிணிகளுக்கான உணவுப் பொருட்களை வழங்கியிருந்தது. இதனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கள் ஊடாகவும் வழங்க நான் நடவடிக்கை எடுத்திருந்தேன். சில சங்களால் அவற்றை வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது. சில சங்கங்களால் அது முடியாமல் போனது. பொறிமுறை சரியாக இருந்தாலும் தலைமைத்துவம் ஒழுங்காக இல்லை என்றால் இப்படித்தான் நடைபெறும்.

கூட்டுறவின் அடிநாதமே சேர்ந்து செயல்படுவதுதான். ஆனால், இப்போது கூட்டுறவில் சேர்ந்தாலும் தனிப்பட்ட ரீதியில் தாங்கள் என்ன இலாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில்தான் செயல்படுகின்றனர். இதனால்தான் கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்த முடியாமல் இருக்கின்றது.




கூட்டுறவுத்துறைக்கு இளையோர் அதிகளவில் வர வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம் இருக்கின்றது. அவர்கள் புத்தாக்கமாக சிந்திப்பவர்கள். அத்துடன் துணிவுடன் - வேகமாக செயலாற்றுவார்கள். அவர்களால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்துவதற்காக, கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஊடாக நெல் கொள்வனவுக்கு நாம் கடன்களை வழங்குகின்றோம். நெல்லுக்கான நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வேறு மாகாண தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். விவசாயிகளும் தமக்கு கூடுதலான இலாபம் கிடைக்கின்றது என விற்பனை செய்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை பதுக்கி வைத்திருந்து, அரிசிக்கான விலையை தீர்மானிப்பவர்களாக மாறுகின்றார்கள். கடந்த காலங்களில் நெல் அறுவடையின்போது அரிசியின் விலை குறைவடையும். ஆனால் தற்போது அரிசியின் விலையில் மாற்றமில்லை. இவ்வாறு தனியார் அரசியின் விலையை தீர்மானிப்பதை மாற்றியமைப்பதற்கு எமது கூட்டுறவு அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும். அவர்கள் எங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சிறியதொரு இலாபத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சந்தை விலையை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யும்போது மக்கள் பயனடைவார்கள். அரிசி மாபியாவையும் கட்டுப்படுத்த முடியும் -என்றார். (எ- 05)

## போதைப்பொருளை பாவித்த பின் பேருந்தைச் செலுத்திய சாரதி

கொழும்பு, மே 11

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த பேருந்தை பாதுகாப்பற்ற வகையில் செலுத்தியமை தொடர்பில் அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணிகள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து களுத்துறை பகுதியில் வைத்து களுத்துறை தெற்கு பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

பின்னர் குறித்த சாரதியை, சட்டவைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்திய போது அவர் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்தியமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ)

## தமிழ் கட்சிகளுக்கு கிடைத்த...

(07ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் கட்சிக்கு 376 ஆசனங்கள் கிடைத்த அதேவேளை, பிரதான தமிழ் அணிகளான இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை மொத்தமாக 568 ஆசனங்களை கைப்பற் றியிருக்கின்றன.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத் தில் தமிழரசு கட்சிக்கு அடுத்ததாக இரண் டாவது இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி வந்திருக்கிறது. தமிழரசு கட்சிக்கு 135 ஆசனங்களும் தேசிய மக்கள் சக்திக்கு 81 ஆசனங்களும் தமிழ் காங்கிரஸுக்கு 79 ஆசனங்களும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு 46 ஆசனங்களும் கிடைத் திருக்கின்றன.

தமிழ் கட்சிகள் பாராளுமன்ற தேர்த லில் இழந்த செல்வாக்கை உள்ளூராட்சி தேர்தல்களில் கணிசமானளவுக்கு மீட்டெடுக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. ஆனால், வடக்கு தமிழ் மக்கள் தமிழ்க் கட்சிகளை முழுமையாக அரவணைத்திருக்கிறார்கள் என்று கூறமுடியாது. இந்த தேர்தல் முடிவுகளினால் உத்வேகம் அடைந்திருக்கும் சில தமிழ்க்கட்சிகள் தமிழ்த் தேசியவாதத்தை கூடுதலான அளவுக்கு உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்கு நாட்டம் காட்டக்கூடிய சாத்தி யம் இருக்கிறது.

தங்களுக்கு தற்போது கிடைத்த வெற் றியை (தாங்கள் பங்கேற்காத கடந்தகா லப் போராட்டங்களை வெறுமனே நினைவு கூர்ந்துகொண்டு உணர்ச்சிமயமான கற்பிதங்களுடன் கூடிய கற்பனா வாத சுலோகங்களை எழுப்பும் (தோல்வி கண்ட) அரசியல்பாதைக்கு தமிழ் மக்களிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக தமிழ்க்கட்சிகள் நம்பினால் மீண்டும் தவ றிழைப்பதாகவே அமையும். ●

## தமிழ்வழியில்...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடகத்தில் ஆங்கில இலக்கியப் பட்டப் படிப்பில் விடை கன்னட மொழியில் எழுதலாம். தமிழ்நாட்டில் தமிழ் மருத்துவம் ஆகிய சித்த மருத்துவத்தை ஆங்கிலத்தில் படிப்பது சரியா? இன்றைய வளர்ச்சியாக உள்ள உடற்கூற்றியல், ஆய்வு முதலியவற்றை உடனுக்குடன் தமிழில் தரலாம் தர முடியும்!

அயல்நாட்டு மருத்துவமுறை ஆகிய அலோபதி நூல்களை உடனுக்குடன் நாம் மொழி பெயர்த்து பயன்படுத்த வேண்டும். சேலம் நகராட்சித் தலைவராக ராஜாஜி இருந்தபோது , 'தமிழ் சாஸ்த்திர பரிபாஷை சங்கப் பத்திரிக்கை' என்ற ஒன்றை நடத்தி அறிவியல் தொழில் நுட்பக் கலைச் சொல் ஆக்கத்துக்கு உதவியுள்ளார்.

பெ. தூரனின் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகள் உள்ளன. கலைக்கதிர் இதழ், க்ரியா பதிப்பகம், மணவை முஸ்தபா , தனித்தமிழ் அறிஞர் அருளி ஆகியோர் கலைச் சொல்லாக்க நூல்களை வெளியிட்டுள்ளனர்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே (1985) கலைச் சொல்லாக்க நூல்களும் பாட நூல்களும் வெளியிடப்பட்டன. தமிழ்ப்பல்கலைக் கழகமும் பாட நூல் நிறுவனமும் பல நூல்கள் வெளியிட்டன.

இலங்கையில் மருத்துவப் பட்டத்துக்கு இரண்டாண்டு பாடங்கள் தமிழில்தான் நடத்தப்பட்டுள்ளன. இன்றைய வளர்ச்சியால் நூல்கள் பற்றாக்குறை இருப்பினும் ஆங்கில மூலநூல்களை வைத்துப் பாடம் நடத்தினால், உடனே துணை நூல்களைத் தர பதிப்பகங்களும், அறிவியல் அறிஞர்களும் தயாராக உள்ளனர். (தினமணி)

## இந்தியாவா, பாகிஸ்தானா?...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அரக்சியும் இந்தியாவுக்கு வருகை புரிந்துள்ளார். அவர் இந்தியா வருவதற்கு முன்பாக பாகிஸ்தான் சென்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இது ஒரு திட்டமிட்ட பயணமாகும்.

ஜுபைரின் வருகையும் மோடியுடனான சந்திப்பும் அசாதாரணமான ஒன்றாக பார்க்கப்படுகிறது. மோடி சவூதிக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட சமயத்தில், ஏப்ரல் 22 அன்று பஹல்காம் தாக்குதல் நடைபெற்றது. அதில் 26 நபர்கள் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, மோடி தன்னுடைய அரசுமுறைப் பயணத்தை பாதியிலேயே நிறுத்திவிட்டு நாடு திரும்பினார்.

சவூதி இணை அமைச்சர் அதெல் அல் ஜுபைரை இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசிய பிறகு, எக்ஸ் தளத்தில் பின்வருமாறு பதிவிட்டார் ஜெய்சங்கர்.

'சவூதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அதெல் அல் ஜுபைரை சந்தித்துப் பேசினேன். தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் குறித்த புரிதலை அவருடன் பகிர்ந்து கொண்டேன்' என்று குறிப்பிட்டார்.

ஏப்ரல் 30 அன்று அறிக்கை ஒன்றை வெளியிட்ட சவூதி அரேபியா, அமைதியை வலியுறுத்தியது. மேலும் அனைத்துப் பிரச்னைகளுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. தான் எந்த ஒரு நாட்டுக்கும் ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதையே இந்த அறிக்கை சுட்டிக்காட்டியது.

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற போராக இருந்தாலும் சரி, 1971-ல் நிகழ்ந்த போராக இருந்தாலும் சரி பாகிஸ்தானுடன் சவூதி எப்போதும் துணை நின்றது.

1998-ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவின் ஐந்து அணு ஆயுத பரிசோதனைகளுக்கு பதிலடி தரலாமா வேண்டாமா என்று பாகிஸ்தான் தீவிர ஆலோசனையில் இருந்த போது, சௌதி அரேபியா நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் பேரல்கள் கச்சா எண்ணெயை பாகிஸ்தானுக்கு இலவசமாக அளிப்பதாக வாக்குறுதி அளித்தது.

பனிப்போர் காலத்திலும் சவூதி அரேபியா மேற்கத்திய நாடுகளுடன் இருந்தது. எனவே பாகிஸ்தானுடனான உறவில் சவூதிக்கு எந்த விதமான பிரச்னையும் இருந்திருக்கவில்லை.

ஆனால் தற்போது உலகம் மாறிவிட்டது. பாகிஸ்தான் மீதான மேற்கத்திய நாடுகளின் அணுகுமுறையும் மாற்றம் கண்டுள்ளது.

இந்தியா மேற்கத்திய நாடுகளுடன் நெருங்கிய வட்டத்தில் இருக்கின்ற சூழலில், பாகிஸ்தானுடனான நம்பிக்கையின்மையும் அதிகரித்து வருகிறது. இதனால் பாகிஸ்தான் மற்றும் சவூதிக்கு இடையிலான உறவும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. ●

## உயிரிழந்த...

பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, சந்தேக நபரான ஆசிரியருக்கு வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மே 19 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முற்படுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவியை சக மாணவர்கள் முன்னிலையில் அவமானப்படுத்தினார் என்று பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பணியகத்துக்கு கடந்த 06 ஆம் திகதி முறைப்பாடு கிடைத்திருந்தது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் - என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொழும்பின் பிரபல மகளிர் கல்லூரி ஒன்றில் கல்வி கற்ற தமிழ் மாணவி தவறான முடிவு எடுத்து கடந்த மாதம் 29ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் 6ஆவது மாடியிலிருந்து விழுந்து இறந்தார். இவரின் மரணத்துக்கு நீதி கேட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுவான...

மேலும், 35 உள்ளூராட்சி சபைகளில் நாம் தனிப்பெரும் கட்சியாக உறுப்பினர்களை பெற்றுள்ளோம். 6 சபைகளில் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றிருக்கிறோம். அந்த சபைகளில் தவிசாளர், உபதவிசாளரை தெரிவு செய்யும் பொறுப்பு கட்சிக்கு மட்டுமே இருக்கும். எமக்காக வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீண்போகாது. நாம் பொறுப்பெடுக்கும் சபைகளை திறமையுடனும் - நேர்மையுடனும் நிர்வகிப்போம்.

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக் கூடிய உரிமை பொதுவாக இருக்கும். அந்த வகையில் இந்த 35 சபைகளுக்குமான தவிசாளர், உபதவிசாளர்களை நாங்கள் முன்னிறுத்துவோம். மற்றைய கட்சிகள் இந்த பொதுவான கோட்பாட்டுக்கு இணங்கி, நாம் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களை ஆதரிக்கவேண்டும் என்று தன்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். சில சபைகளில் விதிவிலக்கு எதும் இருந்தால் அது தொடர்பில் ஆராய்வோம்.

பொதுவான வகையில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளோம். யாழ். மாநகர சபைக்கும் இது பொருந்தும்.

விசேடமாக நாங்கள் கேட்டுக்கொள்வது தமிழ்க் கட்சிகளையே. அந்தக் கட்சிகள் இந்த உடன்பாட்டுக்கு வருவது நல்லது என்பது எமது விநயமான வேண்டுகோள். முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகளோடும் நாம் இணங்கியே செயல்படுவோம். ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை இந்தத் தேர்தலில் நாம் விமர்சித்ததாக எனக்கு நினைவில்லை. அவர்களும் எங்களை விமர்சித்ததாக ஞாபகமில்லை. சில கட்சிகள் எங்கள்மீது பாரதூரமான விமர்சனங்களை முன்வைக்கும்போது அதற்கான பதில்களையே வழங்கியிருந்தோம்.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான கூட்டு தொடர்வது நல்லது என்பது எமது சிந்தனை. காலப்போக்கில் அதனை தீர்மானிப்போம். எனவே, இந்த முயற்சி அப்படியான ஒரு போக்குக்கும் வழிவகுக்கலாம். வவுனியாவில் எமது கட்சி பின்னடைந்துள்ளது என்று கூறுவது ஒரு மாயை. கடந்த தேர்தலில் எமது கட்சிக்குக் கிடைத்த வாக்குகளை விட இந்தத் தேர்தலில் வவுனியாவில் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. திடீரென்று வானைத்தொட முடியாது. நாங்கள் கூரையைத் தொட்டுவிட்டோம் இனி மேலே போவோம் - என்றார். (ஐ)

## இந்தியா...

துப்பாக்கிச் சூடு மற்றும் இராணுவ நடவடிக்கைகளையும் இரு தரப்பினரும் நிறுத்துவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இதை செயல்படுத்த இரு தரப்பினருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர்கள், ஜெனரல்கள் மே 12-ஆம் தேதி 12 மணிக்கு மீண்டும் பேசுவார்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே அமெரிக்கா நடத்திய சமரச பேச்சை அடுத்து, கடந்த 7ஆம் திகதி முதல் நடந்து வந்த மோதல் 4 நாட்களில் முடிவுக்கு வந்துள்ளது. இது குறித்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது எக்ஸ் தளத்தில், "அமெரிக்காவின் தலையீட்டால் இரவு முழுவதும் நடந்த நீண்ட பேச்சின் பலனாக இந்தியா - பாகிஸ்தான் மோதலை முழு மையாக, உடனடியாக நிறுத்திக் கொள்ள ஒப்புதல் அளித்துள்ளன. இரு நாடுகளும் புத்திசாலித்தனமான முடிவை எட்டியமைக்கு வாழ்த்துகள். இந்த விவகாரத்தில் கவனம் செலுத்தியமைக்கு நன்றி" - என்று கூறியுள்ளார்.

முன்னதாக, கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காம் பகுதிக்குள் நுழைந்த பயங்கரவாதிகளால் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக இந்தியா, பாகிஸ்தானின் எல்லைக்குள் "ஒப்ரேஷன் சிந்தூர்" என்ற பெயரில் 9 இடங்களில் பயங்கரவாத முகாம்களை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது. இதில், 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் அந்த நாடு அறிவித்தது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவின் 36 இடங்களை குறிவைத்து 400இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியது. ட்ரோன்களையும் 3 விமானங்களையும் இந்தியா சுட்டுவீழ்த்தியது. பதிலுக்கு இந்தியாவின் விமானம் மற்றும் ட்ரோன்களை சுட்டுவீழ்த்தியதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. (ஐ)

## நிபந்தனைகளின்றி...

ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள் ளன - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்க்கட்சிகளின் வாக்குகள் இலட்சத்தில் அதிகரித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் வாக்குகள் பல இலட்சங்களில் குறைவடைந்துள்ளன. இதனை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் பாடுபட்டு வருகிறது.

வாக்களிப்பு வீதம் குறைவடைந்தமையை ஒரு காரணமாகக் கூறுகின்றனர். அவ்வாறெனில், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பொதுஜன பெரமுனவின் வாக்குகள் எவ்வாறு அதிகரித்தன?

அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அரசாங்கம் ஒழுக்கத்தி லிருந்தும் விலகி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மாத்திரமின்றி தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் கூட கைவிடப்பட்டிருக்கின்றன. மக்கள் வழங்கியுள்ள செய்தி தொடர்பில் அர சாங்கம் இதனை விட ஆழமாக சிந்திக்க வேண்டும்.

கொட்டாஞ்சேனை பாடசாலை மாணவி விவகாரத்தில் சந்தேகநபர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. சில சந்தேகநபர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, சிலர் குற்றப்புலனாய்வு பிரிவில் சென்று முறைப்பாடளிக்கின்றனர்.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் இது குறித்து தனக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்று கூறுகிறார். உயிரிழந்த மாணவிக்காக வும், அவரின் குடும்பத்துக்காகவும் முன்னிலையாக வேண்டிய அமைச்சர் அரசாங்கத்தைப் பாதுகாக்கிறார் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## குருந்தூர்...

ஈடுபட்டிருந்தவர்களை கைது செய்ததுடன், உழவு இயந்திரத்தையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். (ஐ)

## தமிழ் தரப்பு...

நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய பாதையிலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாக விலகி வருகிறார்கள் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு வந்தது. இவ்வாறான காலச்சூழலில் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்நிறுத்திய ஒரு தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்து வெற்றிபெறச் செய்துள்ள னர். இதனூடாக வடக்கு - கிழக்கில் தென்னிலங்கை இனவாதிகளுக்கு இடம் கொடுக்கப்படாது என்பதை ஆட்சியாளர்களுக்கு தமிழ் மக்கள் உணர்த்தியுள்ளனர்.

இதேவேளை, தமிழ் தேசிய பரப்பில் அநேக பிரதேசங்களில் தமிழ்த் தேசியம் வெற்றிபெற்றுள்ள போதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையில் பின்தங்கிய போக்கே இருக்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச்சூழலுக்கு தேவையான ஒன்றாகும். இதனால், தமிழ் தரப்பு ஆட்சி அமைக்க நாம் தமிழ் அரசு கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவளிக்கப் பின்னிற்க மாட்டோம். ஆட்சி அதிகார கதிரைக்கான தேசியமாக இல்லாது தூய்மையான ஆதரவுக்கான அழைப்பாக இருந்தால் அந்த அழைப்புக்கு தமிழ்த் தேசிய பேரவை ஆதரவு கொடுக்கும். மேலும், ஒற்றுமையை வலுப்படுத்த தமிழ் அரசியல் பரப்பிலுள்ள பலதரப்பட்டவர்களுடனும் பேசியிருந்தேன். அதற்கான சாதக பெறுபேறும் கிடைத்தது.

இதேநேரம் தமிழ் அரசுக் கட்சியை ஓரங்கட்டும் நிலைமை எம்மிடம் இல்லை. அவர்களுடனும் பேசியே பயணிக்க வேண்டும். தவறான பாதையில் மக்கள் வழிநடத்தப்படுவதை உணர்ந்து அதை வெளிப்படுத்தி தேசியத்தின் பாதையில் மக்களை கொண்டுசெல்ல நாம் வழிவகுத்தோம்.

இதன் ஒரு பகுதியாகவே இம்முறை தமிழ்த் தேசிய பேரவை என்ற கூட்டின் கீழ் உள்ளூர் அதிகார சபை தேர்தலில் மக்களிடம் சென்றிருந்தோம். அதற்கான அங்கீகாரதை மக்கள் தந்துள்ளனர். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் கட்சிகளின் போக்குக்கு மக்கள் ஒரு பாடத்தைக் கொடுத்தார்கள். அந்த பாடத்தின் ஊடாகக் கிடைத்த படிபபினைகள் தற்போது தமிழ்த் தேசிய பாதையை மீளவும் உறுதிபடுத்திக் கொடுத்துள்ளது - என்றார். (ஐ)

## வடக்கு...

அவர்கள் பட்ட கஷ்டம், வலி பெரும் வேதனைமிக்கதாக இருந்திருக்கும். வடக்கு என்பதும் இலங்கைக்கு கிடைக்காமல் இருந்த பிள்ளைதான்.

தற்போது அந்தப் பிள்ளை நாட்டுக்குக் கிடைத்துள்ளது. போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். எனவே, தேசிய நல்லிணக்கத்துக்காக மட்டுமல்ல அபிவிருத்திக்காகவும் எம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்வோம்.

இதனை நாம் வாக்குகளுக்காக செய்யவில்லை. நாம் சேவை செய்தால் வாக்கு என்பது தானாகவே கிடைக்கும். எனவே, உண்மையாகவே சேவையாற்றுகிறோம். வடக்கு மாகாணத்தில் மன்னாரில் எமக்கு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது. வவுனியாவிலும் வெற்றி கிடைத்துள்ளது.

வடக்கில் 150 உள்ளூராட்சி உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் அவ்வாறு இருக்கவில்லை. கிழக்கிலும் 216 உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்"- என்றார்.

## காரைநகர் வந்த பஸ் விபத்தில் பலர் காயம்!

சிலாபம், மே 11

காரைநகர் - கொழும்பு அதிசொகுசு பேருந்தும் லொறியும் மோதிய விபத்தில் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்று புத்தளம் - சாலியவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இந்த விபத்து அநுராதபுர வீதி, புத்தளம் - சாலியவெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மக்களின்...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அந்த சமிக்ஞையை புரிந்து கொண்டு, தவறுகளைச் சரிசெய்து, முன்னேறிச் செல்வேன். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் திசைகாட்டி வெற்றி பெற்றது. ஆனால், இன்று எதிர்க்கட்சிகள் தான் வெற்றியைக் கொண்டாடுகின்றன. அவர்கள் சந்தோஷமாக இருப்பதற்கு நாங்கள் இடம்கொடுத்து பார்த்துக் கொண்டிருக்கிறோம் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## விகாரையின்...

700 ஏக்கர் வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை விவசாய நடவடிக் காக உழவு இயந்திரம் மூலம் உழுத மூவர் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பிலேயே விகாராதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், "விகாரைக்கு சொந்தமான நிலத்தில் அகழ்வாராய்ச்சி செய்தனர். நிலத்துக்கு உரிமை கோரும் நபருக்கு அரசியல் தொடர்புகள் உள்ளன. வடக்கில் இது போன்ற அங்கீகரிக்கப் படாத அகழ்வாராய்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன. இவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டாலும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்கின்றன", என்றும் கூறினார். (ஐ)

## வடக்கு,கிழக்கில்...

செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். அந்த வகையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து சபைகளை பலப்படுத்துவதாக தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வட, கிழக்கு எங்கும் பரந்துபட்டள விலே

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களோடு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாகவே வவுனியா மாநகர சபை ஆட்சி அமையவேண்டும் என்பது எமது விருப்பம். எனவே, அதன் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளோடு எமக்கு கிடைத்த விகிதாசார ஆசனங்களை எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதன் அடிப்படையில் முடிவை எட்டுவோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தொடர்ந்து பயணிப்பது தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எமது தலைமை குழு கூடி ஆராயவுள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு

# உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் கட்சிகள் சேர்ந்து ஆட்சி!

## மக்களின் ஆணை இதுவே என்கிறது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி!

யாழ்ப்பாணம், மே 11

**தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் ஆட்சியை அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து நிர்வகிக்க வேண்டும் என்ற தீர்ப்பையே தமிழ் மக்கள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் மூலம் வழங்கியுள்ளனர் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மக்கள் வழங்கிய தீர்ப்பின்படி ஆட்சி அதிகாரத்தை தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக ஓரணியில் இணைந்து செயல்படுத்துவது அவசியம். தமிழ் அரசுக் கட்சி அதிக ஆசனங்களை எடுத்துக் கொண்டாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கவில்லை. இதனால், தமிழ் மக்களின் நலன்கருதி ஏனைய தரப்பினருக்கும் விட்டுக்கொடுப்புகளுடன் செயல்படத் தயாராக வேண்டும். இதுவே, மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது.

தற்போது, பெரிய, சிறிய என்ற நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை. அனைத்தும் சமமான நிலையிலேயே இருக்கின்றன. தவறுகள் இனிமேல் இழைக்கப்படக் கூடாது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி, போன்ற கட்சிகள் தேசியத்தை வைத்தே தேர்தலை எதிர்கொண்டன. இந்தக் கட்சிகள் அதிகப்படியான ஆசனங்களை பெற்றிருக்கின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 307 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 106 ஆசனங்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி 80 ஆசனங்களையும் பெற்றுள்ளன. ஏறத்தாழ 500 ஆசனங்கள் கூட்டாகக் கிடைத்துள்ளன.

மக்கள் கொடுத்த ஆணைக்கு ஏற்ப இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஆகிய கட்சியினர் கூட்டாகப் பேசி ஆட்சி அதிகாரங்களை ஒன்றுபட்டு செயல்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## வல்வெட்டித்துறையில் நாளை இந்திர விழா!

வடமராட்சி, மே 11

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயத் தீர்த்தத் திருவிழா நாளை திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் இந்திர விழா நடைபெறவுள்ளது.

இந்திரவிழாவை அலங்கரிக்கும் முகமாக 3 கிலோ மீற்றர் நீளத்துக்கு வாழைமரங்கள் மற்றும் வர்ண விளக்குகள் அலங்காரத்துடன் வானுயர் கட் அவுட்கள், முப்பரிமாண பொம்மைகள், 100இற்கும் மேற்பட்ட இராட்சத புகைக்கூண்டுகள், நீர் நடன நிகழ்வுகள், 10இற்கும் மேற்பட்ட மேடைகளில் இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நடன நிகழ்சிகள், பொம்மலாட்ட நிகழ்வுகள், சிலம்பாட்ட நிகழ்வுகள் போன்றன நடைபெறவுள்ளன. (ஐ)

## அரச ஊழியருக்கு பேரிடர் கடன் புதிய சுற்றறிக்கை வெளியானது

கொழும்பு, மே 11

அரசு ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்குவது தொடர்பான புதிய விதிகள் அடங்கிய புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மே முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2025 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தில் ஏற்படும் அதிகரிப்பை கருத்தில்கொண்டு, அரசு ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதல் 4 இலட்சம் ரூபாய் வரை பேரிடர் கடன்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ஐ)

## நீர்த்தேக்கத்தில் விழுந்த ஹெலியை மீட்க நடவடிக்கை!

கொழும்பு, மே 11

மாதுறுஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்த இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பெல் 212 ஹெலிகொப்டரை மீட்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் அவசரமாக தரையிறங்கும்போது நீர்த்தேக்கத்தில் விழுந்தது. இதில், பயணித்த 12 சிப்பாய்களில் 6 பேர் உயிரிழந்தனர். ஏனையவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்த விபத்துக் குறித்து விசாரிப்பதற்காக 9 பேர் கொண்ட குழுவை விமானப் படைத் தளபதி நியமித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருட்டுடன் தொடர்புடையவர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, மே 11

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு கல்கிஸ்ஸை - ராஹூல வீதி பகுதியில் வைத்து சந்தேக நபர் 12 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மொறட்டுவை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் விசாரணையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொறட்டுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு வீடுகளின் கதவுகளை உடைத்து பெறுமதியான பொருட்களை திருடியதாகவும், வாகனத்திலிருந்த மடிக்கணினி மற்றும் ரப் கணினி ஆகியவற்றை திருடியதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து மடிக்கணினி, 2 ரப் கணினிகள், தங்கச் சங்கிலி, தங்க தோடுகள் மற்றும் 2 எரிவாயு அடுப்புகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இந்தியா - பாக். போர் பதற்றம் வெற்றிலை ஏற்றுமதி பாதிப்பு!

கொழும்பு, மே 11

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையிலான பதற்றமான சூழ்நிலை காரணமாக வெற்றிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக வெற்றிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் கராச்சிக்கான வெற்றிலை ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு அதிகளவான வெற்றிலை ஏற்றுமதி நடைபெறுகிறது.

வாரத்தில் இரு நாட்களுக்கு விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்கள் வெற்றிலையை கொள்வனவு செய்கின்றனர். எனினும், விமான சேவை நிறுத்தப்பட்டமையினால் வெற்றிலைகள் விமான நிலையத்தில் தேங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகர்கள் வெற்றிலைகளைக் கொள்வனவு செய்யாமையால் உள்நாட்டுச் சந்தைக்கு வரும் வெற்றிலையின் அளவு அதிகரிக்கும். இதனால், வெற்றிலையின் விலை குறைவடையலாம் என்றும் வெற்றிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

## 'ரீச்சர் அம்மா'வை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, மே 11

தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளை நடத்தும் 'ரீச்சர் அம்மா' என அழைக்கப்படும் பிரபல ஆசிரியையான ஹயேஷிகா பெர்னாண்டோவால் இளைஞர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளானமை தொடர்பில் அவரைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆசிரியை ஹயேஷிகா, அந்த இளைஞனை உதைத்துள்ள நிலையில், அந்த உதை இளைஞனின் விதை பகுதியை பாதித்துள்ளதுடன், பின்னர் அவர் சிகிச்சைக்காக நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்துக்குப் பிறகு, ஹயேஷிகா அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், அவரது கணவர் மற்றும் ஹயேஷிகா பெர்னாண்டோவின் முகாமையாளர் இருவரும் கட்டானா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி, நீர்கொழும்பு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர், சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீர்கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

முக்கிய சந்தேக நபரான 'ரீச்சர் அம்மா' என்ற ஹயேஷிகா பெர்னாண்டோ தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து, அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறும் கட்டான பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ)

## ப.நோ.கூட்டுறவு சங்கங்களில் உப்பு பைக்கெற்றை பெறலாம்!

யாழ்ப்பாணம், மே 11



பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் யாழ்ப்பாண மக்கள் உப்பு பைக்கெற்றுகளை பெற்றுக் கொள்ள முடியுமென்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந. திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

உப்பின் விலை கட்டுப்பாடற்ற ரீதியில் அதிகரித்துள்ள நிலையில், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவு சங்கமானது மன்னாரில் உப்பைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகித்துள்ளது.

179 ரூபாய்க்கு ஒரு பைக்கெற் உப்பை பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியும். பொதுமகன் ஒருவர் ஆகக் கூடியது 3 உப்பு பைக்கெற்றுகளையே கொள்வனவு செய்ய முடியும் - என்றுள்ளது. (ஐ)

## கொழும்பில் இரு வேறு இடங்களில் தீப்பரவல்!

கொழும்பு, மே 11

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இரு இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது.

வொக்ஷோல் வீதியில் உள்ள இரண்டு கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டது. இதனை அணைப்பதற்கு 5 தீயணைப்பு வாகனங்கள் பணியில் ஈடுபட்டிருந்தன.

இதேநேரம், கொழும்பு - ஆமர் வீதியில் இரும்பு பொருள் விற்பனை நிலையம் ஒன்றிலும் தீப்பரவல் ஏற்பட்டது. தீயை கட்டுப்படுத்தும் பணியில் 2 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்த தீ விபத்துகளுக்கான காரணங்கள் உடனடியாகத் தெரிய வரவில்லை. (ஐ)

## வெசாக்கை முன்னிட்டு 388 கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, மே 11

வெசாக் பண்டிகையை முன்னிட்டு 388 சிறைக் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்களில் 4 பெண்களும் அடங்குவர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெசாக்கை முன்னிட்டு, சிறைக் கைதிகளை பார்வையிட நாளை மறுதினமும் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை உறவினர்கள் சிறையிலிப்பவர்களை பார்வையிட முடியும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.